Saturday மெயில்

01 - 51

18-09-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin



# டுபாய் 5 நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த ஆசியப் பிச்சைக்காரர்

வளைகுடாநாடுகளில் பிச்சையெடுப்பது பெருமளவில் வருமானம் தரும் தொழிலாக மாறியிருக்கிறது போலத் தோன்றுகிறது.

டுபாயில் பிச்சையெடுத்தமைக்காகக் கைது செய்யப்பட்ட ஆசிய நாடொன்றின் பிரஜை ஒருவர் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக டுபாய் பொலிஸ் இலாகாவின் சுற்றுலாத்துறை பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் முஹம்மத் ரஷீத் அல் முஹைறி தெரிவித்திருக்கிறார்.

கைது செய்யப்பட்ட ஆசியப் பிரஜையின் பெயரையோ அல்லது அவரை இனங்காட்டக்கூடிய வேறு எந்தவொரு தகவலையுமோ வெளியிடாத அல் முஹைறி, அந்த ஆசியர் ஏற்கனவே டுபாயில் இருந்து நாடு கடத்தப்பட்டதாகவும் சட்டவிரோதமாகப் பிச்சையெடுக்கும் தொழில் மூலமாகக் கிடைக்கப் பெறும் சம்பாத்தியத்தில் ருசிகண்டுவிட்டதனால் அவர் மீண்டும் திரும்பிவந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார் என்று காலீஜ் ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவ்வருடம் நோன்புக் காலத்திலும் ஈத்பெருநாளின் போதும் நகரில் பிச்சையெடுத்தமைக்காக 360 க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் சுற்றுலா விசாவில் வந்த வெளிநாட்டவர்கள் என்றும் அல் முஹைறி தெரிவித்திருக்கிறார். ஆசியர்களுக்கு அடுத்ததாக அராபிய நாடுகளைச் சேர்ந்தவர்களே வளை குடா நாடுகளில் பிச்சையெடுப்பவர்களில் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள் என்றும் காலீஜ் ரைம்ஸ் தெரிவித்திருக்கிறது.



Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்னொரு இருண்ட காலம்

அப்பப்பா மூச்சு முட்டுகிறது. தமிழ் நாட்டில் தமிழர்களின் வாழ்வை முன்னேற்றுவதற்காக ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி சானல்களின் பெயர்களை ஒருமுறை சொல்லிப்பார்க்கும் போதுதான் நமக்கு இந்தப் பிரச்சினை. சன், கே டி.வி., ஆதித்யா, ஜெயா, ராஜ், கலைஞர், ஜீ, ஸ்டார் விஜய்,பொதிகை, வசந்த், பாலிமர், மெகா, தமிழன், கேப்டன், மக்கள் தொலைக்காட்சி என இன்று சுமார் 35 க்கும் அதிகமான சானல்கள் தமிழில் ஒளிபரப்பு செய்கின்றன.

இவற்றின் எண்ணிக்கை விரைவில் லிம்கா அல்லது கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம்பெறும் அளவுக்கு உயரும் என நம்பலாம்.

இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில் இத்தனை சானல்கள் தமிழில் ஒளிபரப்பாகின்றன என்றால், அந்தப் பெருமையைச் சொல்லி சிலாகிக்காமல் இருக்கமுடியாது.

முன்பெல்லாம் இலங்கை ரூபவாஹினியில் வாரம் ஒருமுறை ஒளிபரப்பாகும் தமிழ்ப் படங்களைக் கூட ஓய்வாக இருந்தால் மட்டுமே பார்ப்பதும் அதுவும் அடுத்த வீட்டுக்குச் சென்று பார்ப்பதற்கு சங்கடப்பட்டு தவிர்த்து விடுவதும் நம் பழக்கமாக இருந்தது. பிறகு மைய அரசின் ஒளிபரப்பில் மண்டல ஒளிபரப்பாக தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற்ற பிறகு தொலைக்காட்சியைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதை அவசியப்படும் போது அக்கம்பக்கத்தினர் வீட்டுக்குச் சென்று பார்ப்பதும் அதிகமானது.

அப்போதெல்லாம் மதிப்புமிக்க ஒரு கருவியாகப் பார்க்கப்பட்ட இந்தத் தொலைக்காட்சி, பிறகு பொழுதுபோக்கு அம்சமாக மாறி, இன்று கேளிக்கைப் பொருள்களில் ஒன்றாக மாறிப்போனது. இது எப்படி நடந்தது?

அரசியல் கட்சியோடு தொடர்புடையவர்களால் தொடங்கப்பட்ட தனியார் தொலைக்காட்சி சானல்கள் முதலில் பொதுவான அம்சங்களோடு திரைப்படங்களை ஒளிபரப்பி வந்தன.

தொடக்கத்தில் தங்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்கத் தொடங்கிய மக்கள் பிறகு ஓய்வுநேரங்களை முழுக்க முழுக்கத் தொலைக்காட்சியின் முன் கழிக்கத் தொடங்கினர். இதுதான் சானல்களைத் தொடங்கியவர்களின் எதிர்பார்ப்பும் கூட.

பிறகு தொடங்கியதுதான் கருத்துத் திணிப்பு. இதில் அவர்கள் பெற்ற வெற்றியே. இன்று வரை தொடங்கப்படும் புதிய சானல்களின் அடித்தளம். இதன் விளைவாக வேறு பல சானல்கள் தமிழில் உருவாகவும் மொழிமாற்று சானல்கள் வரவும் அது வழிகோலியது.

இதன் தொடர்கதைதான் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. குறிப்பாக குழந்தைகளில் தொடங்கி, இளைஞர்களில் வளர்ந்து முதியோரில் முடியும் வரை இன்று அனைவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர்.

பெரும்பாலான குழந்தைகளுக்கு வெளி உலகமே தெரியாத நிலை. ஒற்றுமை, ஒருமைப்பாடு, கலாசாரம் என்ற பொதுப்புத்திக்கான விடயங்களே தெரியாதவர்களாக அவர்கள் வளர்ந்து வருகின்றனர்.

பொதிகைத் தொலைக்காட்சியைத் தவிர, குழந்தைகளுக்கான மற்ற சனல்கள் உள்ளிட்ட எவையும் மோசமான, விபரீதமான வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ப்பதில்லை.

இந்தியாவில் பாலியல் கல்வி இன்னமும் அறிமுகப்படுத்தப்படாத நிலையில் அது குறித்த அடிப்படை அறிவுகூட குழந்தைகளுக்கும் வளர் இளம் பருவத்தினரிடையேயும் இல்லாத நிலையில் இந்தியாவில் பாலியல் உறவுகொள்ளும் திரைப்படங்கள் வெளிநாட்டு தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்படுகின்றன. இந்தியாவில் இந்த ஒளிபரப்புக்கான அவசியம் என்ன? மக்கள் விரும்பிக் கேட்டுத்தான் அரசு அனுமதித்துள்ளதா?

பொதுவாக அனைத்து வயதினரையும் அவர்களது வேலைகளைக் குறித்த நேரத்தில் செய்யவிடாமல் பொன்னான நேரத்தை கிரகித்துக் கொள்ளும் இந்த ஒளிபரப்புகள் அனைத்து இலவசமாகக் கிடைக்கும் (இதிலும் விதிவிலக்கு உண்டு). ஆனால், அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் டிஸ்கவரி, நேஷனல் ஜியோகிராபி, பி.பி.சி. போன்ற சானல்கள் கட்டண ஒளிபரப்புகளாகத் தொடர்கின்றன.

இதுபோன்ற சானல்களை மைய அரசு குறைந்த கட்டணத்தில் பெற்று மக்களின் நன்மையைக் கருதி இலவசமாக ஒளிபரப்பினால் மாதக் கட்டணமாவது குறையும்.

குறிப்பாக, தமிழகத்தில் இன்று கல்வி நிறுவனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு தொடங்கப்பட்டு வரும் நிலையில் பள்ளி, கல்லூரி மாணவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் அவர்களின் பாடங்களோடு தொடர்புடைய காட்சிகளோடும் இளைஞர்களுக்கு சர்வதேச அளவில் வேலைவாய்ப்பை வழங்கும் நிறுவனங்கள் குறித்தும் சுயவேலைவாய்ப்பு உள்ளிட்ட வாழ்க்கைக் கல்விக்கான ஒரு முழுநேரச் சானலைத் தொடங்க எவரும் முன்வரவில்லை.

செல்வந்தர்களோ, அறக்கட்டளைகளோ, தொண்டு நிறுவனங்களோ, கல்வி நிறுவனங்களோ, ஏன் இலவசங்களுக்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வாரி இறைக்கும் மத்திய, மாநில அரசுகளோ இது குறித்து சிந்திக்காதது ஏன் என்ற காரணம் தெரியவில்லை.

இந்தியாவின் அதீத வளர்ச்சியைப் பொறாமைக் கண்களோடு பார்த்துக் கொண்டிருக்கும் உலக நாடுகளுக்கு மத்தியில் பன்னாட்டு நிறுவனங்கள் நம்மை விழுங்கக் காத்திருக்கும் நிலையில் இந்திய இளைஞர்களுக்கு கிடைத்து வரும் வேலைவாய்ப்பைத் தட்டிப்பறிக்கும் வளர்ந்த நாடுகளுக்கு மத்தியில் இன்னும் பழங்கதைகள் பேசி, தொலைக்காட்சியில் தோன்றும் பொய்யான தோற்றங்களில் மயங்கி, அதன் கேளிக்கை நிகழ்ச்சிகளே கதியாகக் கிடந்தால், இந்தியர்களின் வாழ்வில் குறிப்பாக தமிழர்களின் வாழ்வில், 'இன்னொரு இருண்ட காலம்' என்ற வரலாற்றை வருங்காலம் படிக்கும்.

**இரா.மகாதேவன்**
**(தினமணி)**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேற்று பறவைக் காய்ச்சல் இன்று சூப்பர் பக் நாளை...?

அறையே அதிரும் வகையில் தும்மாதவர் எத்தனை பேர்? பழங்களைச் சுத்தம் செய்யாமல் அப்படியே கடித்துச் சாப்பிடாதவர் உண்டா? சாப்பிடும் முன் கையைச் சுத்தம் செய்பவர் தானா நீங்கள்? காலுறையை அணிந்த பின் கையை சுத்தம் செய்யாமல் அப்படியே அலுவலகம் கிளம்புவோர் இல்லையா என்ன? சிந்தனையில் மூழ்கி விட்டால் போதும் கைநகங்கள் காணாமல் போகும். அப்படியே மூக்கைத் துழாவி பிஸ்கட்டையும் சுவைப்பது உண்டா இல்லையா? இப்படி எல்லாம் செய்வதால் என்ன ஆகிறது என்று எத்தனை பேருக்கு விழிப்புணர்வு இருக்கிறது.

இந்த வகையில் நேற்று பறவைக்காய்ச்சல், இன்று சூப்பர் பக், நாளை...?

அலெக்சாண்டர் பிளெமிங் 82 ஆண்டுக்கு முன் இவர் பென்சிலின் என்ற உன்னதமான மருந்தைக் கண்டுபிடித்தார். உடலில் பக்றீரியா தொற்றுவதால் ஏற்படக்கூடிய கோளாறுகளைத் தடுக்கும் வல்லமை படைத்த முதல் அன்டிபயடிக் மருந்து இதுதான். அதன்பின் தான் பல்லாயிரக்கணக்கான விஞ்ஞானிகள் ஏகப்பட்ட அன்டிபயடிக் மருந்துகளைக் கண்டுபிடித்து சந்தையில் குவித்தனர். எந்த அன்டிபயடிக் மருந்துகள் நல்லது செய்வதாக நாம் நினைத்தோமோ அந்த மருந்துகள் தான் ஆபத்தானதாக உருவெடுத்துள்ளன.

அறுபதாண்டுகளில் வயிற்றுவலி முதல் மூளைப் பாதிப்பு வரை உள்ள பல கோளாறுகளைத் தீர்க்க பல அன்டிபயடிக் மருந்துகள் வந்துவிட்டன. ஆனால் அன்டிபயடிக் மருந்துக்கும் கட்டுப்படாமல் பல தொற்றுக்கிருமிகள் உள்ளன என்பதை 16 ஆண்டுக்கு முன்பே கண்டுபிடித்து விட்டனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.

சூப்பர் பக் கிருமிக்கு அண்ணன்களை கடந்த 16 ஆண்டுகளில் அமெரிக்க, பிரிட்டன், அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தபடி தான் உள்ளனர். 1992 இல் முதன் முறையாக அமெரிக்காவில் ராக்பெல்லர் பல்கலைக்கழக மைக்ரோபயாலஜிஸ்ட் அலெக்சாண்டர் டோமஸ் அன்டிபயடிக் மருந்துகளுக்கே கட்டுப்படாத பல பக்றீரியாக் கிருமிகள் உள்ளன என்று பட்டியலிட்டிருந்தார். இப்படி 16 ஆண்டாக நீடித்த சூப்பர் பக் சர்ச்சை இப்போது மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இந்த சூப்பர் பக் கிருமிக்கு புதுடில்லி கிருமி என்றும் பிரிட்டன் லொள்ளு விஞ்ஞானிகள் பெயர் வைத்து விட்டனர். இந்தியாவில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய வெளிநாட்டவர் சிலருக்கு சூப்பர் பக் தொற்றியுள்ளது என்று கூறப்பட்டாலும் உண்மையில் அவர்களைத் தொற்றியது ஸ்டபிலோகோகஸ் ஆரஸ் பக்றீரியா என்ற கிருமி தான். உலகம் முழுவதும் மனிதன், பிராணிகள், விலங்குகள் மூலமாகப் பரவி உள்ள 3 ஆயிரம் பக்றீரியா தொகுப்புகளில் ஒன்றுதான் இது. அப்படியிருக்க இந்தியாவில் இருந்துதான் ஆரம்பித்தது என்று கூறியிருப்பது முட்டாள்தனம் என்று பல நாட்டு விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டனர் என்பது திருப்தியளிக்கும் விடயம்.

**உலகின் டொப் டென் நோய்கள்**

| நோய் | பலி |
|---|---|
| சுவாசக்கோளாறுகள் | 40 இலட்சம் |
| எய்ட்ஸ் | 30 இலட்சம் |
| மலேரியா | 50 இலட்சம் |
| காசநோய் | 20இலட்சம் |
| தட்டம்மை | 5இலட்சம் |
| கக்குவான் இருமல் | 3 இலட்சம் |
| டெட்டன்ஸ் | 2 இலட்சம் |
| கழுத்துவீங்கி | 1.7 இலட்சம் |
| செக்ஸ் நோய் | 1.5 இலட்சம் |
| பேதி | 2.2 இலட்சம் |

**மூக்கு முதல் முதுகு வரை**

கார்ப்பாபெனம் இது அன்டிபயடிக்குகளில் முக்கியமான ரசாயனக் கலவை. வெகு அரிதான சமயங்களில் டாக்டர்களால் நோயாளிக்கு அளிக்கப்படுவது. ஆனால் மருந்து கம்பெனிகளின் உபயத்தால் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மிகச் சுலபமாக எதற்கெடுத்தாலும் பயன்படுத்தப்படும் நிலை உருவாகி விட்டது.

சில முக்கிய அறுவைச் சிகிச்சைக்குப் பின் நோயாளிக்கு அளிக்கப்படும் இந்த மருந்து எதற்கெடுத்தாலும் அளிக்கப்படுவதால் உடலில் கிருமி எதிர்ப்பு சக்தி ஒரு கட்டத்தில் குறைந்து விடுகிறது. அதிலும் காஸ்மெடிக் என்று சொல்லப்படும் மூக்கு முதல் முதுகு வரை செய்து கொள்ளப்படும் அழகூட்டும் சிகிச்சைக்குப் பின் இது அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் காஸ்மெடிக் சிகிச்சை பெற்ற 37 பிரிட்டன் நோயாளிகளிடம் சூப்பர் பக் இருப்பதற்குக் காரணம் இந்தக் கார்ப்பாபெனம் அன்டிபயடிக் பயன்படுத்தப்பட்டதுதான் என்று தான் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடந்தாண்டே கிளம்பி விட்டது

சமீபகாலமாக கூப்பாடு போட்ட சூப்பர் பக் கிருமி முதலில் இந்தியா சென்று திரும்பிய ஒரு அவுஸ்திரேலியரைத் தொற்றியது என்று அந்த நாடு கூறியது.

அடுத்து பிரிட்டன் தான் அதிக லபோதிபோ போட்டது. எங்கள் நாட்டைச் சேர்ந்த 37 பேர் இந்தியாவுக்கு மருத்துவ சுற்றுலா சென்றனர். அவர்களுக்கு மருத்துவமனை சிகிச்சையின் போதுதான் சூப்பர் பக் தொற்றியது என்று அலறியது. ஆனால் கடந்தாண்டே சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு பயணி இந்தியா வந்தபோது அவருக்கு இந்தக் கிருமி தொற்றியது.

மும்பையைச் சேர்ந்த மருத்துவர்கள் அப்போதே கிருமி தொற்றியது குறித்து கவலை வெளியிட்டனர். அப்போதெல்லாம் இந்த சூப்பர் பக் கூப்பாடு ஆரம்பிக்கவில்லை.

ஆனால் பிரிட்டனில் இருந்து லான்செட் ஆராய்ச்சி இதழில் வெளிவந்ததும் தான் இதில் பரபரப்பு ஏற்பட்டது.

பிரிட்டன் நிபுணர்கள் தான் வீண் பழியை இந்தியா மீது தொடர்ந்து போட்டபடி இருந்தனர்.

பேராதாக்குறைக்கு இந்தக் கிரிமிக்கு நியூடில்லி மெடல்லோ லாக்டோமஸ் என்றும் பெயர் வைத்தனர். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் காஸ்மெடிக் சர்ஜரி எனப்படும் உடலை அழகுபடுத்தும் சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

**கையைக் கழுவுகிறீர்களா இல்லை அடுத்த பக்...பக்**

காலையில் எழுந்ததும் பெட் காபி. அடுத்து பேப்பர் படித்துக் கொண்டே சிற்றுண்டி அப்படியே ரி.வி. ரிமோட்டுக்கு ஒரு தாவல். அதற்குள் ஏகப்பட்ட முறை ட்ரிங்...ட்ரிங்... இப்படி சில மணி நேரத்திற்குள்ளேயே பல முறை பல பொருட்களைத் தொட்டு விடுகிறோம்.

இவற்றில் எல்லாம் கிருமிகள் இருக்கின்றன என்பது தெரியுமா? இதுவரை வெளியில் தெரியாமல் நம்முள் பல பக்றீரியாக்கள் [illegible] வந்தன. இப்போது வியாபாரப் போட்டி அதிகமாகிவிட்டது. பயமுறுத்தினால் அடுத்தடுத்து அன்டிபயடிக் மருந்துகள் விற்பனை ஆகும் என்பதால் சூப்பர் பக் பிரசாரம் தலைதூக்கி உள்ளது. இது ஒரு ஆரம்பம் தான். அடுத்தடுத்து பக் பக் வரத்தான் போகிறது.

ஒரு தும்மல் போட்டால் போதும். அடுத்த நிமிடம் மருந்துக்கடையில் தான் சிலர் நிற்பர். வீடு திரும்பும் போது ஒரு அன்டிபயடிக் மருந்துடன் தான் வருவார். மருந்துகள் சாப்பிடுவதுடன் அன்டிபயடிக் மருந்துகளைச் சாப்பிடுவது வெகு சகஜமாகி விட்டது.

அரைகுறை மருத்துவர்கள் எந்த மருந்து தந்தாலும் கூடவே ஒரு அன்டிபயடிக் எழுதித் தந்துவிடுவதுண்டு. அதில் எப்படியாவது குணமாகி விடும் என்ற நம்பிக்கை தான். ஆனால் உடலில் உள்ள பக்றீரியாக் கிருமிகளை அழிக்க அன்டிபயடிக்கை செயற்கையாக விழுங்கி விழுங்கி கடைசியில் அதற்குப் பலனே இல்லாமல் போய் விடுகிறது ஒரு கட்டத்தில்.

கார்த்திகேயன் குமாரசாமி தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஏ.எல். முதலியார் அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி மாணவர். இவரும் பிரிட்டனைச் சேர்ந்த திமோதி வால்ஷ் என்ற விஞ்ஞானியும் சேர்ந்து தான் சூப்பர் பக் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரையைத் தயார் செய்தனர்.

ஆனால் அதைத் திருத்தி லான்செட் வெளியிட்டுள்ளது தான் இதில் கவனிக்கப்பட வேண்டியது. சூப்பர் பக் என்று சொன்னாலும் சரி நியூடில்லி பக்றீரியா என்று சொன்னாலும் சரி எதற்கும் கவலைப்பட வேண்டாம். இந்த பக்றீரியா ஒரு பெரிய விடயமே இல்லை. பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பன்றிக்காய்ச்சல் வைரஸை விட இது ஒன்றும் ஆபத்தானது அல்ல என்று அடித்துக்கூறினர்.

ஆய்வுக்கட்டுரை வெளியானதும் மத்திய சுகாதார அமைச்சகம் கடும் கொதிப்படைந்தது. எந்த ஆதாரமும் இல்லாமல் ஆவணங்களும் இல்லாமல் இப்படிப் பொதுவாக குற்றஞ்சாட்டுவது அழகல்ல. அதுவும் விஞ்ஞானிகள் இப்படிச் செய்வது வேதனையானது. மற்ற நாடுகளில் எல்லாம் சோதனைகளைச் செய்த பின்னர் அதை ஒப்பிட்டுப் பார்த்துத்தானே ஒரு நாட்டைக் குற்றம் சாட்ட முடியும். அப்படியில்லாமல் எந்த ஆதாரமும் இல்லாமல் எப்படிச் சொல்லலாம் என்று அமைச்சகம் பதிலடி கொடுத்தது.

**சிக்கனிலும் உண்டு பாலிலும் இருக்கு**

நீங்க கையேந்தி பவனில் சாப்பிடுபவரா மெக்டோனால் சமாச்சாரமா வெட்டுங்க வயது இருக்கில்ல. வயிற்றில் போனவுடன் என்னவாகிறது என்று தெரியுமா? கண்டுகொள்ளமல் விட்டதன் விளைவு தான் இந்த சூப்பர் பக்.

நோய் தாக்காத மனிதன், நோய் தாக்காத ஆடு, மாடு, கோழி, பன்றி இருக்க அன்டிபயடிக் தேவைப்பட்டது. அப்படி எல்லாவற்றுக்கும் அன்டிபயடிக் பயன்படுத்தப்படும் போது மனிதர்களுக்கு மட்டுமல்ல பிராணிகளுக்குக் கூட அது வேலை செய்யாமல் போய் விடுகிறது.

ஆடு, மாடு, கோழி மூலம் கிடைக்கும் மட்டன் சிக்கனில் இருந்து கூட மனிதனுக்கு சூப்பர் பக் போன்ற பல பக்றீரியாக்கள் பரவுகின்றன. இந்த உண்மை புரிந்தால் போதும். ஏன் மாடு மூலம் கிடைக்கும் பாலில் கூட பக்றீரியா உள்ளது. இலட்சங்களில் உயிர் பறித்த கொடிய நோய்கள் இதுவரை.

**அன்டோனைன் பிளேக்**

ரோமாபுரி மன்னர் மார்கஸ் ஆன்டோனியஸ் ஆண்ட 165, 180 இல் பரவிய ஆட்கொல்லி நோய். ஐந்து இலட்சம் பேரை பலி வாங்கியது.

**கிப்ரியன் பிளேக்**

இதுவும் ரோமாபுரி மன்னர்களின் 251, 270 இற்கு இடைப்பட்ட ஆட்சிக் காலத்தில் பரவியது. ஒரு நாளைக்கு 5 ஆயிரம் பேரைப் பலி வாங்கியது. கிளாடியஸ் கோதிஸ் என்ற ரோம் மன்னரும் இதற்குப் பலியானார். ரோமாபுரி எழுத்தாளர் கிப்ரியன் பெயர் இதற்கு வைக்கப்பட்டது.

**ஜஸ்டினிசம் பிளேக்**

541-542 இற்கு இடைப்பட்ட காலத்தில் கிழக்கு ரோமாபுரி மன்னன் ஜஸ்டினியன் ஆட்சி செய்தார். அவர் காலத்தில் பரவிய இந்த பிளேக் உலகம் முழுக்க 7 கோடிப் பேரை விழுங்கி விட்டது.

**பிளாக் டெத் 1**

348- 1350 இடைப்பட்ட காலத்தில் கிழக்கு ஆசியாவில் ஆரம்பித்து 10 கோடி பேரை அழித்த அசுர பிளேக். அதிகம் பேரைப் பலி வாங்கியதால் இந்தப் பெயர்.

**இத்தாலி பிளேக்**

1629-1631 இல் வடக்கு இத்தாலியில் ஆரம்பித்த பிளேக். இத்தாலியில் ஒன்றரை இலட்சம் பேரை பலி வாங்கியது.

**செவிலி கிரேட் பிளேக்**

1647-1652 இல் ஸ்பெயினில் தாக்கிய பிளேக் இது. 50 ஆயிரம் பேரை விழுங்கியது.

**கிரேட் பிளேக் ஆப் லண்டன்**

1665-1666 இல் இங்கிலாந்தைப் பயமுறுத்திய பிளேக். லண்டன் மக்கள் தொகை ஒரு இலட்சம் பேரில் 20 சதவீதத்தை பலி வாங்கியது.

**மார்செலிஸ் கிரேட் பிளேக்**

1720 இல் பரவிய ஐரோப்பிய பிளேக் தான். பிரான்சில் ஆரம்பித்தது. ஒரு இலட்சம் பேரைக் கொன்றது.

**சின்னம்மை**

1775-1783 இல் வடஅமெரிக்கா, மெக்ஸிக்கோவில் பரவிய நோய். ஒன்றரை இலட்சம் பேரை சாகடித்தது.

**மூன்றாவது பிளேக்**

சீனாவில் 1885 இல் பரவியதில் ஆசியாவில் ஒரு கோடிப் பேர் மாண்டனர்.

**ஸ்பானிஷ் ப்ளூ**

1918 இல் உலக மக்கள் தொகை 160 கோடி. அதில் மூன்றில் ஒரு பங்கு இந்த வைரஸ் தாக்குதலுக்கு பலியாயினர். பன்றிக் காய்ச்சல் வைரஸ் போன்ற முதல் வைரஸ் தாக்குதல் இதுதான்.

**ஏஷியன் ப்ளூ**

1956-58 இல் சீனா, சிங்கப்பூரில் பரவிய வைரஸ் தாக்குதல் அமெரிக்கா வரை பரவியது. 40 இலட்சம் பேர் பலியாயினர்.

**ஹொங்கொங் ப்ளூ**

1968-1969 இல் ஹொங்கொங்கில் இருந்து பரவிய வைரஸ் தாக்குதல். ஹொங்கொங் மக்கள் தொகை 5 இலட்சத்தில் 15 சதவீதம் பேரைப் பலி வாங்கியது.

**எய்ட்ஸ்**

1981 இல் ஆரம்பித்தது. இன்று வரை நீடிக்கிறது. ஆபிரிக்காவில் ஆரம்பித்தது. உலகின் மக்கள் தொகையில் 12 சதவீதத்தை விழுங்கி விட்டது.

**பன்றிக்காய்ச்சல்**

பறவைக் காய்ச்சலைத் தாண்டி பன்றிக் காய்ச்சல் இன்னும் நம்மை விடவில்லை. 122 நாடுகளில் பரவி உள்ள இதற்கு ஒரு இலட்சம் பேர் பலியாகி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழு நாளும் ஆகாயத்தில்?



கன்சாஸ் நகரில் இருந்து ரொறன்ரோவுக்குப் புறப்பட்ட விமானம் 15 நிமிடங்களாக ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த நிலையில் தலைமை விமானி 'கனவான்களே, சீமாட்டிகளே எமது விமானத்தில் இருக்கும் 4 என்ஜின்களில் ஒன்று பழுதடைந்துவிட்டது. எதற்கும் பயப்படவேண்டியதில்லை. திட்டமிட்ட நேரத்தையும் விட ஒருமணித்தியாலம் தாமதித்தே ரொறன்ரோவை அடைவோம். எம்மிடம் இன்னும் 3 என்ஜின்கள் இருக்கின்றன" என்று அறிவிப்புச் செய்தார்.

அரை மணித்தியாலம் கழித்து அவரிமிருந்து மீண்டுமொரு அறிவிப்பு; இன்னுமொரு என்ஜினும் பழுதடைந்துவிட்டது. இப்போது கூட நீங்கள் பயப்படவேண்டியதில்லை. எம்மிடம் இன்னும் இரு என்ஜின்கள் இருக்கின்றன. இரு மணித்தியாலங்கள் தாமதித்தே ரொறன்ரோவை அடையக்கூடியதாக இருக்கும் அவ்வளவுதான்.

ஒரு மணித்தியாலம் கழித்து இன்னுமொரு அறிவிப்பு; இன்னொரு என்ஜினும் பழுதடைந்துவிட்டது. நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. ஒரு என்ஜின் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மூன்று மணித்தியாலங்கள் தாமதமாகவே ரொறன்ரோவை அடைவோம் அவ்வளவுதான்.

முதற்தடவையாக விமானத்தில் பயணம் செய்யும் அப்பாவித்தனமான சுபாவமுடைய ஒரு பயணி அருகில் இருந்த பயணியிடம் கேட்டார். 'மீதியாக இருக்கின்ற ஒரு என்ஜினும் பழுதடைந்துவிட்டால், நாங்கள் எல்லோரும் முழுநாளும் ஆகாயத்தில் தான் பறந்து கொண்டிருக்க வேண்டுமா?

## செய்யாத ஒன்றுக்காக தண்டனை



ஒரு சிறுமி பாடசாலையில் இருந்து வீடுவந்து சேர்ந்ததும் தாயாரிடம் 'அம்மா, இன்று பாடசாலையில் ஆசிரியை நான் செய்யாத ஒன்றுக்காக என்னைத் தண்டித்து விட்டார்" என்று கவலையுடன் கூறினாள்.

'என்ன அநியாயம். உங்கள் பாடசாலைக்கு நாளை காலை வந்து அந்த ஆசிரியையிடம் எனது பிள்ளை செய்யாத ஒன்றுக்காக ஏன் தண்டித்தீர்கள் என்று கேட்பேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படாமல் உடுப்புகளை மாற்றிவிட்டு சாப்பிடவா? என்று தாயார் சிறுமியிடம் கூறினார்.

சிறுமி சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது 'நீ எதைச் செய்யவில்லை என்பதற்காக ஆசிரியை தண்டித்தார்" என்று கேட்டார் தாய்.

வீட்டு வேலை என்று சிறுமியிடம் இருந்து பதில் வந்ததே!

## அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டும்



ஒரு ஆசிரியர் நாட்டு சனத்தொகை பற்றி மாணவர்களுக்கு விளக்கமளித்து படிப்பித்துக் கொண்டிருந்தார்.

எமது நாட்டில் பத்து செக்கன்களுக்கு ஒரு தடவை பெண் ஒருவர் பிள்ளை பெற்றுக்கொண்டிருக்கிறார் என்று பிறப்பு வீதத்தை அவர் சொன்ன போது ஒரு மாணவன் எழுந்து சொன்னான் 'அந்தப் பெண்ணைக் கண்டுபிடித்து அவ்வாறு 10 செக்கன்களுக்கு ஒருபிள்ளை பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் சேர்' என்று.

## சகோதரியுடன் வாழ்க்கை



**கணவன்:** நான் இறந்த பின்னர் நீ மறுமணம் செய்து கொள்வாயா?

**மனைவி:** இல்லை, நான் எனது சகோதரியுடன் வாழ்வேன்.

**மனைவி:** நான் இறந்தால் நீங்கள் மறுமணம் செய்துகொள்வீர்களா?

**கணவர்:** இல்லை, நானும் உனது சகோதரியுடன் வாழ்வேன்.

## தாமதத்துக்குக் காரணம்

**ஆசிரியர்:** ஜோசப் நீ ஏன் பாடசாலைக்கு நேரம் தாமதித்து வருகிறாய்?

**ஜோசப்:** வீதியோரத்தில் காணப்பட்ட அறிவிப்புப் பலகையே எனது தாமதத்துக்குக் காரணம்.

**ஆசிரியர்:** வீதியோரத்து அறிவிப்புப் பலகைக்கும் உனது தாமதமான வருகைக்கும் என்ன தொடர்பு?

**ஜோசப்:** 'அருகில் பாடசாலை மெதுவாகச் செல்லுங்கள்' என்று அந்தப் பலகையில் அறிவிப்புக் காணப்பட்டது.



## சொல்வதைக் கேட்காத பொலிஸ்

ஒரு வழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் பிரதிவாதியைப் பார்த்து

**நீதிபதி:** மீண்டும் நீ இங்கு வரக்கூடாது என்று முன்னர் பலதடவைகள் உன்னை எச்சரிக்கை செய்திருக்கிறேன். ஞாபகமிருக்கிறதா?

**பிரதிவாதி:** நானும் நீங்கள் விடுத்த எச்சரிக்கை பற்றி பொலிஸாரிடம் கூறிக் களைத்துப் போய்விட்டேன் பிரபு. நான் சொல்வதை அவர்கள் கேட்கிறார்களில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை பரபரப்பாக்கிய 18 மணிநேரம்...

தனி மனிதனின் போராட்டத்தால் 18 மணி நேரமாக நாடே பரபரப்படைந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு விஹாரமாதேவி பூங்காவுக்கருகில் இடம்பெற்றது.இந்த போராட்டம் இதுவரையில் இலங்கை சந்தித்திராத வகையில் விநோதமாக இருந்ததே முழுநாட்டையும் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது.

ஹோமாகமவைச் சேர்ந்தவர் அகன் பொடிகே மகேஷ் அசங்க டி சொய்ஸா(31 வயது). கொழும்பிலுள்ள சுப்பர்மார்க்கட் ஒன்றின் முன்னாள் ஊழியரான இவர் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.20 மணியளவில் கொழும்பு விஹாரமாதேவி பூங்காவுக்கு அருகிலுள்ள ஹோட்டன் சுற்றுவட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்த 60 அடி உயர கம்பிக் கோபுரத்தில் ஏறி தனது விநோத போராட்டத்தை ஆரம்பித்தார்.

முதலில் இவர் 60 அடி உயர கோபுரத்தில் நின்றதை யாரும் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் அதன் பின்னர் அவர் எழுதி தொங்கவிட்டிருந்த கோரிக்கைகளை பார்த்த பின்னரே நிலைமையின் விபரீத்தை புரிந்துகொண்டனர். அதன்பின்னர் ஊடகங்கள் சுதாகரித்துக்கொள்ள நாடே பரபரப்படைந்தது.



தனது முகத்தைத் துணியால் மறைத்துக் கட்டி அதன் மேல் ஹெல்மட் அணிந்தவாறு கோபுரத்தின் உச்சியில் நின்றவாறு போராட்டத்தைத் தொடர்ந்த இவர் இடையிடையே கீழே குதிக்கப்போவதாக மிரட்டியதால் அப்பகுதியில் பரபரப்புக்கு பஞ்சமிருக்கவில்லை. ஊடகங்கள் அடிக்கடி விஷேட செய்தியாக இவரின் போராட்டத்தை ஒலி,ஒளிபரப்பியதால் ஒருசில மணி நேரத்திலேயே நாடெங்கும் இவர் பிரபலமானார்.

'அரச நிர்வாகத்தில் தவறுகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும். ஜனாதிபதியை சுற்றி உள்ள அதிகாரிகளின் நடவடிக்கைகளால் இந்நாட்டு இளைஞர், யுவதிகளுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. இந்த அநீதியில் நானும் பாதிக்கப்பட்டுள்ளேன். ஜனாதிபதி, கோதாபய, சரத்பொன்சேகா ஆகியோர் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். எனது பிரச்சினைகள் தொடர்பாக பேச ஜனாதிபதி நேரில் வரவேண்டும்'.இது இந்த விநோத போராட்டக்காரரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்.

இக் கோரிக்கைகளை முன்வைத்து அதிகாலை 3.20 மணிக்கு போராட்டத்தை ஆரம்பித்த இவர் தனது கோரிக்கையில் எதுவுமே நிறைவேறாத நிலையில் ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் உறுதிமொழியை எற்றுக்கொண்டு இரவு 9.20 மணிக்கு அதாவது 18 மணிநேரத்தின் பின் தனது போராட்டத்தைக் கைவிட்டார்.

இரவு 9.20 மணிக்கு கோபுரத்திலிருந்து இறக்கப்பட்ட இவர் உடனடியாக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மறுநாள் புதன்கிழமை கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அது மட்டுமன்றி மனநிலை மருத்துவ நிபுணர் முன்னிலையில் இவரை நிறுத்தி மருத்துவ சான்றிதழ் பெறுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நபர் போராட்டத்தை ஆரம்பிக்கும் போது தெரிவித்த தகவல்கள் பொய்யானவையாகவே இருந்தன. முதலில் தான் காலியை சேர்ந்த ரோஹித என்றும் முன்னாள் இராணுவ வீரன் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஆனால் போராட்டம் முடிந்தபின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில் ஹோமாகமவைச் சேர்ந்த அகன் பெடிகே மகேஷ் அசங்க டி சொய்ஸா (31வயது) என்பதும் இவர் கொழும்பிலுள்ள 'சுப்பர்மார்க்கட்' ஒன்றின் முன்னாள் ஊழியர் என்றும் தெரிய வந்தது. அத்துடன் இவர் தனது கோரிக்கைகள் தொடர்பில் தெளிவான விளக்கங்களையோ அல்லது பிரச்சினைகளையோ தெரிவிக்கவில்லை. இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலும் இவர் முன்னுக்குப்பின் முரணான பதில்களையே வழங்கியுள்ளார். தனது குடும்பத்துக்கு ஆபத்து ஏற்படுமென்பதால்தான் ஹெல்மட் அணிந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரின் போராட்டம் உண்மையில் பொதுநலன் சார்ந்ததா அல்லது ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதலினால் நடத்தப்பட்ட போராட்டமா அல்லது தன்னை பிரபல்யப்படுத்திக்கொள்வதற்கான போராட்டமா அல்லது இவர் மனநோயால் பாதிப்புக்குள்ளானவரா எனப் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இக் கோணத்திலேயே பொலிஸாரும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இந் நபர் எப்படிப்பட்டவரோ, இவரின் போராட்டம் வெற்றியோ, தோல்வியோ அதையெல்லாம்விட ஒரு நாள் முதல்வன் போல் ஒரு நாள் கதாநாயகனாகிவிட்டார். அத்துடன் இலங்கையில் இவ்வாறானதொரு விசித்திர போராட்டத்தை மேற்கொண்ட நபர் என்ற பெருமையையும் கோபுரத்தில் ஏறிநின்று நீண்ட நேரம் போராடிய நபர் என்ற சாதனையையும் நிகழ்த்திவிட்டார்.

இவரைப்பார்த்து இன்னும் பலர் கோபுரத்தில் ஏறிவிடுவார்கள் என நினைத்த அரசாங்கம் உடனடியாகவே அந்த கோபுரத்தை அங்கிருந்து அகற்றியமையே இப்போராட்டத்தினால் கிடைத்த உடனடிப் பலனாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எயிட்ஸ் நோயாளியின் மனம்

எயிட்ஸ் நோய் என்றால் ஏதோ கொடிய நோய் வந்தால் மரணம் என்பது போல் நினைக்கிறார்கள். விஞ்ஞானம் வியப்புடன் பார்க்கவில்லை. விழிபிதுங்கவே பார்க்கின்றது. தலைமேல் கை வைக்கின்றது. தன்னால் முடியவில்லையே குணப்படுத்தும் மருந்தைக் கண்டுபிடிக்கவெனக் கவலைப்படுகின்றது.

கண்டுபிடிக்கப்பட்ட மருந்து கூட நோயைக் குணப்படுத்தமாட்டாது. நோயின் தீவிரத்தன்மையையும் அவஸ்தைகளையும் சற்றே குறைக்கும் ஆயுளை சிறிதளவே அதிகரிக்கச் செய்யும் இப்படி ஒரு பூவுலக நரகம். அதை அனுபவிப்பவன் மனம். அது தினமும் செத்துக்கொண்டிருக்கின்ற கொடுமை ஏற்க மறுக்கும் வலி ஆய்வுகூட நோய்க்கூற்றை ஏற்கமறுப்பதும் வேறுநபரினது மாறிவிட்டதே என்ற எண்ணம் பல வைத்தியசாலைகளில் திரும்பத்திரும்ப சோதித்தல் இப்படி ஒரு ஏற்கமுடியாத மனநிலை.

இன்னும் கோபம் கொப்பளிக்கின்ற உணர்வு சிறுசம்பவங்களுக்கே மிகையளவு கோபத்தை வெளிப்படுத்தல் அது தாண்டி வன்முறைகளினுள் நகர்தல் இப்படி ஒரு உணர்வு குழப்பம் நோயாளி ஆகிவிட்டேனே என்ற மனக்கவலை கண்ணீர் சிந்தியும் சிந்தாத மனக்குழப்பம் இன்னும் மனதில் முற்றுப்புள்ளியா இல்லை இது கமாவா அஸ்தமனமா இல்லை அது நோக்கியா முடிவில்லாது தொடரும் வினாக்கள் விரைகிறதா மரணம் இல்லை வீழ்ந்துவிட்டேனா மரணத்துள் நோயுடன் வாழ்கின்றேனா இல்லை தினமும் இறக்கின்றேனா எப்போது எத்தனை நாளில் இல்லை எத்தனை செக்கனில் வெடிக்குமோ என்பதுபோல் ஓர் எண்ணம்.





நினைவாற்றல் குன்றிப் போதல் மரணம் பற்றிய எண்ணம் மறந்துபோகாது மீளெழுந்த வண்ணம் அதனால் அறியாததோர் பதற்றம் களைப்பு மூச்சுவிடமுடியாத கனதி தலை தொடங்கி கால் வரை எதோ ஓர் நோய் உணரப்படுதல் உறவுகளைப் புறக்கணித்தல்,





இன்னும் பயம், அமைதியின்மை, தூக்கம் விலகிவிட்ட நிலை, இன்னும் மனச்சோர்வு, உடலில் மாறுபட்ட வலிகள், உணவின் மேல் வெறுப்பு, உணவிருந்தும் உண்ண முடியாத விரக்தி தற்கொலை வரை நகரும் துன்பியல் இவை யாவும் மேலும் வலுச்சேர்க்கப்படுவதால் நோய் இனங்காணப்பட்ட ஆதரவற்ற நிலை என்பன அமைகின்றன. இதனூடு தற்கொலையும் தனக்குத்தானே தீங்கிளைத்தல், வேலையிழப்பு போன்றவையும் சேர்கின்றன.

இதைவிட வதிவிட இழப்பு அதாவது நோய் இனங்காணப்பட்டதனால் நோயாளி வீட்டில் ஒதுக்கப்படுதல் அல்லது புறக்கணிக்கப் படுதல். இதற்கு நோய்த் தொற்றல் பற்றிய தவறான எண்ணக்கருக்கள் இச் செயற்பாடுகளை வலுச்சேர்க்கின்றன மற்றும் மருத்துவச் செலவுகள் குணப்படுத்தும் மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் இவை நோயின் கனதியில் காத்திரமாகவே பங்களிக்கின்றன.

இத்துடன் சமூகத்தின் கோரப்பிடியில் நோய்த் தொற்றும் பாலியல் நடத்தையுமே சற்று அதிகமாக விமர்சிக்கப்படுவதால் நோயாளி மட்டுமல்ல நோயாளியின் உறவினர்கள் கூட வெளியில் தலைகாட்ட முடியாத கோரம். இவை அனைத்தையும் எண்ணிப்பார்க்கின்ற பொழுது சுட்ட மண்ணிலே மீனாகத்துடிக்கும் நோயாளியின் மனதிற்கு ஆதரவு கொடுக்கும் விதமான வேதனைத் தீர்க்கும் முகமான அனுதாபம் மிக்க ஆற்றுப்படுத்தல் வேண்டிநிற்கின்றது.

**டாக்டர் வெ.நாகநாதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொக்க வைக்கும் சொத்துகள்


பிரபுல் படேல்


கபில் சிபல்


சரத் பவார்


பிரணாப் முகர்ஜி

நீண்ட இழுபறிக்கு பின் ஒரு வழியாக இந்திய மத்திய அமைச்சர்களின் சொத்துகள் குறித்த பட்டியல், பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலை வெளியிடுவதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டன. அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாகக் கடந்து தற்போது அமைச்சர் பதவிகளை அலங்கரிக்கும் மாண்புமிகுக்கள் வைத்திருக்கும் சொத்துகள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சமூக ஆர்வலர் சுபாஸ் சந்திரா அகர்வால் என்பவர், 'இந்திய மத்திய அமைச்சர்கள் சொத்துகள் குறித்த விபரங்களை தெரிவிக்க வேண்டும்' என தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுத்தாக்கல் செய்திருந்தார். ஆனால், பிரதமர் அலுவலகம் இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது. மத்திய அமைச்சர்களின் சொத்துகளை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தெரிவிக்க முடியாது. இது விதிவிலக்கு பெற்றது' என கூறிவிட்டது. இதையடுத்த 'இந்திய மத்திய அமைச்சர்களின் சொத்துகள் குறித்த விபரங்களைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அனுமதி பெற வேண்டும்' என பிரதமர் அலுவலகத்துக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டது. ஆனால், இதற்கு தங்களின் அனுமதி தேவையில்லை என பாராளுமன்றம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மத்திய அரசு கடந்த சில நாட்களுக்கு முன் மத்திய அமைச்சர்களின் சொத்துகள் குறித்த பட்டியலை வெளியிட ஒப்புதல் அளித்தது. இதன்படி 400 பக்கங்கள் கொண்ட எம்.பி.க்களின் சொத்துகள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த விவகாரம் குறித்துத்தான் தற்போது இந்தியா முழுவதும் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

### முதல்வன் யார்?

இந்திய மத்திய அமைச்சரவையிலேயே அதிகமாக சொத்துகள் வைத்திருப்பவர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளவர் என்ற பெருமை மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சரும் தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான பிரபுல் படேலுக்குக் கிடைத்துள்ளது. இவர் 29.62 கோடி இந்திய ரூபா மதிப்புக்கு சொத்துகள் வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மும்பை, வொர்லியில் உள்ள சொத்து, குஜராத்தில் உள்ள நிலம் மற்றும் நகைகள் உள்ளிட்டவை இதில் அடக்கம். இவரது மனைவி வர்ஷா படேல் பெயரில் 37.7 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் உள்ளன.

### ராஜ குடும்பத்துக்கு 2 ஆம் இடம்

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சரும் முன்னாள் மத்திய அமைச்சர் மாதவ ராவ் சிந்தியாவின் [குவாலியர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்] ஜோதிராதித்யா சிந்தியாவுக்கு இந்தப் பட்டியலில் இரண்டாம் இடம் கிடைத்துள்ளது. இவருக்கு 26.3 கோடி ரூபா மதிப்புக்குச் சொத்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குவாலியரில் உள்ள ராணி மகால், வெளிநாட்டு முதலீடு, நகைகள் ஆகியவை இதில் அடக்கம்.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் கபில் சிபலுக்கு 23 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியானா, கர்நாடகா மாநிலங்களில் உள்ள விவசாய நிலம், டொயட்டா கொரல்லா, செவர்லேட் உள்ளிட்ட விலையுயர்ந்த கார்கள் ஆகியவை இதில் அடக்கம். இவரது மனைவி பெயரில் ஏழு கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் உள்ளன. மத்திய அமைச்சர் வீர்பத்ர சிங்கிற்கு 20 கோடி ரூபா சொத்துகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டில்லியில் உள்ள நிலம் நகைகள் ஆகியவையும் இதில் அடக்கம்.

மத்திய விவசாய மற்றும் உணவுத் துறை அமைச்சர், தேசியவாத காங்கிரஸ் தலைவர், சர்வதேச கிரிக்கெட் சங்கத் தலைவர் என பல பொறுப்புகளை வகித்து வரும் சரத் பவாருக்கு எவ்வளவு சொத்து இருக்கும் என நினைக்கிறீர்கள். அவசரப்பட்டு விரல்களை நீட்ட வேண்டாம். நாம் நினைப்பது போல் அவருக்கு அவ்வளவு சொத்துகள் இல்லையாம். சரத் பவார் மற்றும் அவரது மனைவி பெயரில் 6.5 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் தான் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய நிதி அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான பிரணாப் முகர்ஜிக்குச் சொல்லிக் கொள்ளும்படியான சொத்துகள் இல்லை. அவருக்கு ஒரு கோடி ரூபா மதிப்புள்ள சொத்தும் அவரது மனைவி பெயரில் 1.6 கோடி ரூபா மதிப்புள்ள சொத்தும் மட்டுமே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் வைத்துள்ள போர்டு ஐகான் காரின் மதிப்பு 1.75 இலட்சம் ரூபாவாம்.

வெளியுறவு அமைச்சரும் கர்நாடக மாநில முன்னாள் முதல்வருமான எஸ்.எம். கிருஷ்ணாவின் சொத்து மதிப்பு 1.1 கோடி ரூபா. சுகாதார அமைச்சரும் காஷ்மீர் முன்னாள் முதல்வருமான குலாம் நபி ஆசாத் பெயரில் 22.6 இலட்சம் ரூபா வங்கிகளில் உள்ளதாகவும் அவரது மனைவி பெயரில் 83.8 இலட்சம் ரூபா வங்கிகளில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காஷ்மீரின் மற்றொரு முன்னாள் முதல்வரும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவருமான பரூக் அப்துல்லாவுக்கு 2.5 இலட்சம் ரூபா மதிப்புக்குத்தான் சொத்து உள்ளதாம்.

மேற்கு வங்கத்தை கலக்குபவரும் ரயில்வே அமைச்சரும் எளிமைக்கு பெயர் பெற்றவருமான மம்தா பானர்ஜிக்கு ஆறு இலட்சம் ரூபா மதிப்புக்குச் சொந்தமான சொத்துகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மம்தாவின் பெயரில் கார், வீடு என எதுவுமே இல்லை என்பது கூடுதல் தகவல்.

கேரள முன்னாள் முதல்வரும் இராணுவ அமைச்சருமான அந்தோணிக்கு ஒரு இலட்ச ரூபாவுக்கு மட்டுமே சொத்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் உள்ள பணம் தான். இவருக்குச் சொந்தமாக வேறு சொத்துகளோ, வாகனங்களோ இல்லை. இவரது மனைவி எலிசபெத்துக்கு 15 இலட்சம் ரூபா மதிப்புள்ள வீடு, 15 இலட்சம் ரூபா மதிப்புள்ள நிலம், மூன்று வங்கிகளில் 3.1 இலட்சம் ரூபா பணம் ஆகியவை உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகத்துக்கு மத்திய அமைச்சர்கள் அளித்த அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ள தகவல்கள், தேர்தலின் போது அளித்த சொத்துப் பட்டியல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### சசிதரூருக்கு எவ்வளவு சொத்து?


ஐ.பி.எல். கிரிக்கெட் அணி ஏலம் எடுக்கப்பட்ட விவகாரத்தில் சிக்கி மத்திய அமைச்சர் பதவியை இழந்தவர் சசி தரூர். அவரது தோழி சுனந்த புஷ்காரை சமீபத்தில் மூன்றாவது திருமணம் செய்து கொண்டதன் மூலம் மீண்டும் ஊடகங்களின் வெளிச்சத்துக்கு வந்தவர். இவரது சொத்துப் பற்றிய விபரமும் வெளியிடப்பட்டுள்ளது. ஐ.நா.வில் முக்கிய பொறுப்பை வகித்த சசி தரூருக்கு 27 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க்கில் உள்ள ஒரு பிளாட்டும் இந்த 27 கோடியில் அடக்கம்.

### ஏழை அமைச்சர்கள் யார்?

இந்திய மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மாவுக்கு 26 ஆயிரத்து 741 ரூபா மதிப்புக்குத்தான் சொத்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் சுபோத்காந்த் சகாய்க்கு 1.4 இலட்சம் ரூபாவுக்கும் ஜெய்பால் ரெட்டி, முகுல் வாஸ்னிக் ஆகியோருக்கு தலா 3.3 இலட்ச ரூபாவுக்கும் சொத்துகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷின் வங்கிக் கணக்கில் வெறும் 29 ரூபா தான் இருக்கிறதாம்.


எஸ்.எம்.கிருஷ்ணா


மம்தா பானர்ஜி


அந்தோனி


சசி தரூர்


ஜெய்ராம் ரமேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## இதுவா சம்பிரதாயம்?

ஆவணி மாதம் என்றாலே திருமணங்களுக்கு குறைவில்லை என்பர். நானும் ஓர் திருமண வீட்டிற்குச் சென்றிருந்தேன். இரு பெண்கள் தமக்குத் தாமே கதைத்துக் கொண்டனர். ஒரு பெண் மற்றைய பெண்ணுக்கு 'நாங்கள் இவர்களோடு பெரிதாய் கதைப்பதில்லை. எங்கள் குடும்பத்துக்கும் இவர்கள் குடும்பத்துக்கும் ஆகாது. காணிப் பிரச்சினையில் விட்டதுதான். இதுகள் முகத்திலேயே முழிக்கக்கூடாது என்று இருந்தனாங்க. திருமணத்திற்குச் சொல்லிப்போட்டார்கள் என்றுதான் வந்தோம்' என்று கூறினார்.

இவர்கள் இந்த மணமக்களை நல்ல மனதுடன் வாழ்த்த வந்தவர்களா? ஒரு நாளும் இல்லை. இந்த நிலையில் மங்கல வாத்தியங்கள் முழங்கத் தாலி கட்டப்பட்டது. அடுத்து மணமக்களுக்கு அர்ச்சதை போட்டு வாழ்த்த மணமகனின் பெற்றோரை அழைத்தார்கள். அவர்கள் போய் அர்ச்சதை தூவி வாழ்த்தி வந்தார்கள். அடுத்து மணமகளின் தாயார் அர்ச்சதை போட எடுத்தார். நீங்கள் போட வேண்டாம் இங்கே வாருங்கள் என்று தடுத்தது ஓர் குரல். அந்தப் பெண் கையிலே எடுத்ததை தட்டிலே போட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். ஏன் இப்பெண்ணை அர்ச்சதை போடவிடாமல் தடுத்தார்கள் எனக் கேட்ட போது அவர்கள் கூறிய காரணம். அந்தப் பெண் ஓர் விதவை.

ஓர் பெண் தன் மகளிற்குப் போட வேண்டிய அர்ச்சதை போடவிடாமல் தடுக்கப்பட்டது. அந்த பெண் தன் பிள்ளை நல்லாய் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் அந்த அர்ச்சதையைப் போடுவார். ஆனால், விதவை என்ற காரணத்தால் அது மறுக்கப்பட்டது. அவளின் மனம் என்ன பாடுபடும் என்பதனை யாரும் சிந்திப்பதாய் இல்லை.

விதவைகள் வாழ்த்த மாட்டார்கள் என்ற எண்ணம் எப்படி உருவாகியது? யாரால் உருவாக்கப்பட்டது? மனிதர்கள் தாமாகவே ஒவ்வொரு கொள்கைகள் 'சம்பிரதாயங்கள்' மூடநம்பிக்கைகளை உருவாக்கி மனிதர்களின் மனங்களையல்லவா நோகடிக்கிறார்கள். விதவை பெண் ஆசீர்வதித்தால் அந்த மணமக்கள் நன்றாக வாழ மாட்டார்களா என்ன? நல்ல மனதுடன் யார் எதை செய்தாலும் அது நன்றாகவே நடக்கும். இங்கு அந்த மணமகன் வீட்டினரை வஞ்சனை செய்து பேசியவர்களை அர்ச்சதை போட விட்டனர். இவர்கள் நல்ல மனதுடனா வாழ்த்துவார்கள்? இதனை யாரும் புரிந்துகொள்ளவதாய் இல்லை. இதனை கேட்டால் யாரும் ஏற்பதாயும் இல்லை.

ஏன் இப்படியான சம்பிரதாயங்களை உருவாக்கியுள்ளனர் என்ற கேள்விக்கு சரியான விடை காண முடியாமலே இருக்கிறது. அவர்களுக்கும் நல்ல ஓர் மனம் உண்டு என்பதனை யாரும் மறுத்துவிடாதீர்கள். ஒன்றுக்குமே பிரயோசனம் இல்லாத சம்பிரதாயங்களால் நல்ல உள்ளங்களை நோகடிக்காதீர். 'வாழ்க்கை என்பது வாழ்கிறவர்களைப் பொறுத்தது தானே தவிர வாழ்த்துபவர்களைப் பொறுத்ததல்ல'

**சுபோதினி**

## சட்டம் கொடுத்த 'வரம்'

வட அமெரிக்க நாடான மெக்ஸிக் கோவில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்துகொள்ள கடந்த 6 மாதங்களுக்கு முன் தான் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த 6 மாத காலத்தில் சுமார் 400 ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொண்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த திருமணங்களில் 398 திருமணங்கள் சட்டப்படி பதியப்பட்டுள்ளன. இவற்றில் 53 சதவிகிதம் ஆண்களுக்கு இடையில் நடந்த திருமணங்களாகும். மீதம் உள்ள 47 சதவிகிதம் பெண்களுக்கு இடையில் நடந்தது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த 6 மாதத்தில் 41 வெளிநாட்டவர்களும் மெக்ஸிக்கர்களுடன் சேர்ந்து திருமணம் செய்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பியர்கள். இவர்கள் தவிர்த்து தென் அமெரிக்கர்களும் வட அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து திருமணம் செய்து கொண்டனர். ஓரினச் சேர்க்கைத் திருமணங்களை ஒரு சில நாடுகள் தான் சட்டபூர்வமாக்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



இங்கு திருமணமானவர்களில் பலர் 30 முதல் 40 வயதுடையவர்கள். 71 முதல் 90 வயதானவர்களுக்கெனத் தனியாக 4 திருமணங்கள் நடந்தன.

ஓரினச் சேர்க்கைத் தம்பதிகள் குழந்தைகளைத் தத்தெடுக்கவும் உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஓரினச் சேர்க்கைத் திருமணத்திற்கும் அவர்கள் குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு சில அமைப்புகள் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயத் தமிழ் செய்த அருணகிரி

சொ.அருணன்

இன்றைக்கு பத்திரிகையில் புதிதாய் வெளிவருகிற நூல்களுக்கு மதிப்புரை என்ற பெயரில் அந்த நூல் குறித்த செய்திகளோடு அறிமுகப்படுத்துகிறார்கள். இதைப் புதிய முறையிலான 'நூல் அறிமுக இலக்கியம்' எனலாம். இந்த முறையையும் பாரதியாரே முதன்முதலில் துவக்கி வைக்கிறார்.

வள்ளுவனைப் போல், கம்பனைப் போல், இளங்கோவைப் போல் என்று இவர் சுட்டுகிற தமிழ் ஆன்றோர் வரிசையில் பட்டியல் இன்னும் நீள்கிறது. பட்டினத்தாரையும் தாயுமானவரையும் இராமலிங்க அடிகளாரையும் அதே வரிசையில் வைத்துப் புகழ்கிறார். ஆழ்வார்கள், ராமானுஜர், விவேகானந்தர் என நீளும் வரிசையில் அதிசயத் தமிழ் செய்தவர் என அருணகிரியாரையும் அவர் தம் தமிழ்ப் புலமையையும் குறித்து பாரதியார் மதிப்புரை எழுதியிருக்கிறார். இந்த மதிப்புரை ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கிறது. அவர் தம் பாடல்களைத் தாம் முன்னமே விருப்பமுடன் தெரிந்திருப்பினும் அவர்தம் பாடல்கள் அமைந்திருக்கும் முறைகளைச் சுட்டி அவற்றை ஆராய்கிறவிதமாய் மதிப்புரை எழுதியிருக்கிறார். அருணகிரியின் கவிதை என்ற தலைப்பில் இம்மதிப்புரை 29.03.1917 சுதேசமித்திரன் இதழில் வெளியாகியுள்ளது. அருணகிரியாரின் தமிழை அதிசயத் தமிழ் என்று தலைப்பிட்டு நூல் குறித்த மேற்கண்ட முதல் அடையாளத்தைத் தருகிறார்.

'இவருடைய கவிதையின் கனிவைப் பார்க்க வேண்டுமானால் பஞ்சரத்நத் திருப்புகழ், கந்தரலங்காரம், வேல்வகுப்பு மூன்றையும் படித்தால் போதும் சந்தக் கணக்கை வைத்துக்கொண்டு தெளிவாகவும் இயற்கையாகவும் சொல்லுதல் மிகவும் அருமை. காலிலும் கையிலும் தளைகளைப் பூட்டிக்கொண்டு கூத்தாட முடியாதென்று பழமொழி சொல்லுவார்கள். இந்த மஹானுடைய கவிதையோவென்றால் மிகவும் கடினமான தளைகளைப் பூட்டிக்கொண்டு தெய்வீகக் கூத்தாடுகிறது.

பஞ்சரத்நத் திருப்புகளின் முதற்பாட்டில் இவர் தமக்கு அதிசயமான தமிழ் பாடுத் திறமை வேண்டுமென்று முருகனிடம் கேட்கிறபொழுதே தெய்வ அருள் தோன்றி இவருடைய கவிதை அதிசயமாகி விடுகின்றது'.

'மலடி வயிற்றில் குழந்தை பிறந்தால் அவளுக்கு எப்படி ஆச்சரியமும் மகிழ்ச்சியும் உண்டாகுமோ, கங்கா நதி வானத்திலிருந்து பொழிவதுபோல புதையலெடுத்த செல்வத்தைக் கண்டு ஏழை மகிழ்ச்சி அடைவதுபோல, இளம்பெண் வலியத் தழுவியதுபோலத் தமது பாட்டைப் படிக்கும்போது அத்தகைய இன்பமெல்லாம் தோன்ற வேண்டும் என்கிறார் அருணகிரியார்' என்று அருணகிரியாரின் கவிக்கடலில் மூழ்கி அதற்கு மதிப்புரை எழுதுகிறார் பாரதியார். இது மதிப்புரை என்னும் இலக்கியவரிசையில் பாரதியார் செய்த புதுமை எனலாம்.

மேற்காட்டி வரிகளில் அந்த ரஸம் இருக்கத்தான் செய்கிறது என தான் ருசித்த அந்த ரசம் நிறைந்த கவிதையை மேற்கோளிட்டுக் காட்டுகிறார்.

பின்வரும் பாடலைப் பாருங்கள்

**கலியை...**
**கடின...**
**அலையு...**
**அறிவை யுருட்டித் திரட்டி**
**வைத்துநின்...**
**அமுத குணத்**
**தைத் துதிக்க**
**வைத்தனை**
**அடிமை**
**படைக்கக்**
**கருத்து**
**முற்றிலும்**
**- நினை**
**யாயோ**

பாரதியாரின் பாடல்களில் பல இடங்களிலும் கலியுகத்தை ஒழிப்பதும் கிருதா யுகத்தைச் சமைப்பதும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

அதுபோலவே இப்பாடல்களுக்கு விளக்கம் எழுதுகிறபோது, 'கலியுகத்தை ஒழித்து நோயைத் துரத்தி, கவலைத் தீயைத் தணித்து, கசப்பை இனிப்பாக்கி, உயிரை அழுக்கறுத்து, கருணை மழையிலே குளிக்க விட்டு, அலைகிற மனதை நிறுத்தி அதிலுள்ள இருட்டைத் தொலைக்கும் பொருட்டு முருகனுடைய அழகாகிய விளக்கை அதில் நாட்டி அந்த விளக்கு நீடித்தெரியும்படி அறிவைத் திரட்டி முருகனுடைய அமிர்த குணங்களைப் புகழும்' படி தம்மை வரகவியாக்கச் சொல்கிறார்.

அருணகிரியாரின் கவிதைகளில் வீரம், ரௌத்ரம் என்ற ரசங்கள் செறிந்து கிடக்கின்றன எனக் கூறுகிறார் பாரதியார். எனினும், இவர்தம் கவிதையின் முக்கிய பொருள் தெய்வ பக்தி; ஆகையால் அதை முன்னிறுத்தியே மதிப்புரை வரைகிறார் பதிப்பாசிரியர், குறிப்பாக சீனி விசுவநாதன் குறிப்பிடுகிறபோது இந்தக் கட்டுரையை இன்னார் எழுதினார் என்ற விபரம் சுதேசமித்திரனில் குறிக்கப் பெற

## இலக்கிய சுவை...

வில்லை என்றாலும் இந்தக் கட்டுரையைப் பாரதியார்தான் எழுதினார் என்பதை நிரூபிக்க, 'நியூ இந்தியா' பத்திரிகையில் அவர் எழுதிய ஆங்கிலப் படைப்பான 'தி போயஸி ஆப் அருணகிரி' என்னும் படைப்பையே ஆதாரமாகக் கொள்ளலாம் என்பது அருணகிரியாரைப் புகழ பாரதியாரைப் போல யாருளர் என்பதாய் அமைகிறது.

# வரைவு நீட்டிக்காதே!

தமிழ் இலக்கியங்களில் 'குறி' என்பது களவு காலத்தில் ஊரார் அறியாமல் கள்ளத்தனமாகத் தலைவன், தன் தலைவியைக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் சந்திக்கும் இன்ப நிகழ்வாகும். பகல் நேரத்தில் சந்தித்தால் பகற்குறி எனவும் இரவு நேரத்தில் சந்தித்தால் இரவுக்குறி எனவும் இருவகையாக வழங்கப்படும்.

இவை தவிர, 'அல்லகுறி' என்று ஒன்றும் உண்டு. சில வேளைகளில், பகலிலோ அல்லது இரவிலோ குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறிப்பிட்ட ஒரு வினோத ஓசையை எழுப்பி, தனது வருகையைத் தலைவிக்கு அறிவிக்கும் தலைவனுக்கு பதில் இயற்கை நிகழ்வாக பறவைகளாலோ அல்லது விலங்கினங்களாலோ கூட இது நிகழ்வது உண்டு. இதுவே அல்லகுறி.

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையில் கபிலர், களவு காலத்தில் பகற்குறியின் போது தலைவன் தலைவியை மணம் புரிந்த நிகழ்ச்சியை 'நாரையை' சாட்சிப் பொருளாக வைத்து வர்ணித்துள்ளார்.

**'யாருமில்லை தானே**
**கள்வன்**
**தானது பொய்ப்பின்**
**யானெவன் செய்கோ**
**நினைத்தா னன்ன**
**பார்க்கும்**
**குருகு முண்டுதான்**
**மணந்த ஞான்றே'**
**(குறு.25)**

என்று கூறுவதன் மூலம் தலைவன் வரைவு நீடித்தவிடத்து தலைமகள், தோழிக்கு வருந்திக் கூறியதாக இத்துறை அமைந்துள்ள. அதாவது, களவில் மணந்த தலைவன், ஊரறிய மணம் முடிக்காது காலம் தாழ்த்துவது கண்டு வருந்தித் தன் தோழியிடம் கூறியபோது, குருகு (நாரை அல்லது கொக்கு) அங்கு இருந்தது. ஆனால், அதுவும் மீனைத் தனது பசியாற்றுவிக்கும் பொருட்டு அதைக் கொத்தித் தின்பதிலேயே அதன் கவனம் இருந்தது. அதனால் தலைவன், 'என்னைக் கைவிடமாட்டேன்' என்று சூளுரைத்த செய்தியைக் கூட அந்தக் குருகு கேட்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது என வருத்தம் தோய்ந்த குரலில் கூறுகிறாள்.

இரவுக்குறி வந்து நீங்கள் தலைமகனிடம் தோழி எதிர்ப்பட்டு, 'இனியும் வரைவு நீட்டிக்க வேண்டாம்' என்று கூறுவதாகக் கீழ்க்கண்ட குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

**வேரல் வேலி வேர்க்**
**கோட் பலவின்**
**சாரல் நாட செல்வியை**
**யாகுமதி**
**யாரஃ தறிந்திசி னோரே**
**சாரற்**
**சிறுகோட்டுப் பெரும்பழந்த**
**தூங்கியாங்கி இவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ**
**பெரிதே' (குறு.18)**

எனும் கபிலரின் பாடல் மூலம் தலைவியைக் கள்ளத்தனமாகச் சந்திப்பதை விட்டு, கற்பு மணத்துக்கு வரும்படி தோழி தலைவனிடம் வற்புறுத்திக் கூறுகிறார். 'செல்வியை யாகு' என்பதன் மூலம் 'திருமணம் செய்துகொள்ள உள்ள நிலையைப் பெறுவாயாக' என்பதாக இக்குறியிடப் பாடல் மூலம், 'குட்டும் குறியுமாக' மணந்துவாழும் குடும்ப வாழ்க்கை வாழ வலியுறுத்துகிறார் கபிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பே செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர்



ஹலோ ரொபோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் ஆய்வின் படி 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பே செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருந்திருக்கவேண்டுமென்பது புலனாகிறது.

அதன் வடக்கு துருவத்தில் அட்லாண்டிக் கடல் அளவு தண்ணீர் இருக்கிறது. இது பூமியில் உள்ள அளவுக்கு சமமானதாகும்.

செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் உள்ளதா,இல்லையா என்ற சர்ச்சை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஹலோ ரொபோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வெளியிட்ட செவ்வாய்க்கிரகத்தின் படங்களை வைத்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

தவிர ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க செயற்கைக்கோள் வெளியிட்ட தகவல்கள் மூலமும் ஆராய்ச்சி செய்தனர்.

செவ்வாய்க்கிரகத்தில் 54 ஆறுகளின் டெல்டா படுகைகள் உள்ளன.இதனால், அங்கு ஆறுகள் உற்பத்தியாகி ஓடிக்கொண்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 51

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ❋ | 5 |
| 6 | 7 | ❋ | ❋ | 8 | 9 |
| ❋ | 10 | 11 | 12 | ❋ | 13 |
| 14 | ❋ | 15 | 16 | 17 | ❋ |
| 18 | ❋ | 19 | 20 | ❋ | 21 |
| 22 | 23 | ❋ | ❋ | 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து அரசுப் பக்கம் தாவிய எம்.பி.
5. இலையான்
6. குழு என்றும் சொல்லலாம்
8. உக்கிப் போகாதது
10. போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி (குழம்பியுள்ளது)
15. புத்திரன் (திரும்பியுள்ளது)
19. இதில் 64 வகை உண்டு
22. மருத்துவரிடம் போனால் முதலில் இதைப் பிடித்துப் பார்ப்பார்
24. கணவன் என்றும் சொல்லலாம்

**மேலிருந்து கீழ்**

1. இது அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பர்
2. சூர்யா நடித்த படம் ஒன்று (குழம்பியுள்ளது)
5. பண்டைய கால போர் ஆயுதம் (குழம்பியுள்ளது)
11. திருமணமாகாத பெண் (தலைகீழ்)
12. சோகம் (குழம்பியுள்ளது)
14. ஓசை என்றும் சொல்லலாம் (தலைகீழ்)
21. சூழ்ச்சி

### குறுக்கெழுத்துப்போட்டி - 49 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. இந்தியா | 1. இடி அமீன் |
| 6. மடி | 2. மந்தி |
| 8. சூடம் | 4. சூர்யா |
| 11. அதிபர் | 5. வேம்பு |
| 20. மரணம் | 13. பயணம் |
| 24. சிம் | 18. தாரம் |
| 26. தாதி | 23. மதி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம்.எப்.எம்.மபாஸ்,**
**இல. 130, ஹிஜ்ரா வீதி,**
**கிண்ணியா-03.**

### பாராட்டுப் பெறுவோர்

01. எஸ்.மகேஸ்வரன், இல.4/37, அபேராஜா மாவத்தை, இரத்தினபுரி.
02. எஸ்.சூரியகலா, இல. 720/3, கந்தவல வீதி, இரத்மலானை.
03. சி.சங்கீதா, அரசடி வீதி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.
04. செ.ரொபேட், இல. 114 1/1, நியூநாம்குயர், கொழும்பு-13.
05. கி.துர்க்கா, இல. 21, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................







# சப்தங்கள்

பெரிய ஓசைகள் மனிதர்களின் உடல் நலத்தையும் மன நலத்தையும் பெரிதும் பாதிக்கின்றன. ஓசை ஒரு அளவு வரை ஆரோக்கியகரமாகும். குறைந்த அளவுடைய ஓசை கவனத்தை ஒரு முகப்படுத்துவதற்கும் ஓய்வு எடுப்பதற்கும் செயற்படுவதற்கும் தடையாக இருக்காது அமைதியான சூழ்நிலையைவிட தாலாட்டுப்பாடல்தான் குழந்தையைத் தூங்கவைக்க உதவுகிறது. நகர வீதிகளிலிருந்து வரும் பேரோசைகள் உடல் நலத்திற்கு ஏற்றதல்ல வாகனங் களும் சைரன்களும் கட்டி டம் கட்டும்போது வரும் ஓசைகளும் பலவிதமான மணியோசைகளும் ஒலிபெருக்கிச் சப்தங்களும் ஒலி மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன நகரத்தில் வசிப்ப வர் கள் வழக்கமாக இதுபோன்ற சப்தங்களைக் கேட்டுவருவதால் இது அவர்களுக்குப் பழகிப் போயிருக்கும் தொந்தரவாக இருக்காது ஆயினும் இது உடல் நலத்திற்கும் மன நலத்திற்கும் மிகவும் ஆபத்தானது.






டெசிபல் எனும் வார்த்தை ஒலியின் அளவைக் குறிக்கிறது. 90 டெசிபலுக்கு அதிகமான சப்தம் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. 95 டெசிபலுக்கு அதிகமான ஓசையை வருடக் கணக்காகக் கேட்டுவரும் பட்சத்தில் காதுகள் செவிடாகிவிடும். தொடர்ச்சியான சப்தம் உறக்கத்தைத் தடை செய்கிறது. 130 டெசிபலுக்கு அதிகமான ஓசை காதுகளுக்கு வலி தருகிறது. மன அமைதியைக் குலைக்கிறது. இதனால்தான் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட சப்தங்களை ஏற்படுத்தாதபடி சட்டத்தின் மூலம் தடை செய்திருக்கிறார்கள். இலைகள் சலசலக்கும் ஓசை - 10 டெசிபல், ரகசியம் பேசும் குரல் - 20 டெசிபல், மெதுவான உரையாடல்-40 டெசிபல், கூட்டமான ஒரு கடையின் உள்ள ஓசை - 60 டெசிபல், நகரத் தெருக்களின் சப்தம் - 70 டெசிபல், தொழிற்சாலையின் ஓசை - 100 டெசிபல், ஒலி பெருக்கிச் சப்தம் - 110 டெசிபல், விமானத்தின் ஓசை - 120 டெசிபல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருகி வரும் 'சிறுவர் தொழிலாளர்'



ஒரு தேசத்தின் செழுமையும் விருத்தியும் நாளைய தலைவர்களாகிய இன்றைய சிறுவர்களின் கரங்களிலேதான் தங்கியுள்ளன. ஆனால் நாடளாவிய ரீதியில் நடைபெற்று முடிந்த போர் மற்றும் வறுமைநிலை காரணமாகப் பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலை செல்வதை விடுத்து தொழிலுக்குச் செல்கின்றனர்.இதனால் 'சிறுவர் தொழிலாளிகள்' நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனர்.

இவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்கின்ற வயதில் வேலைக்கமர்த்தப்படுவது அப்பட்டமான சிறுவர் உரிமை மீறலாகும்.இதற்கு அரசும் சிறுவர் நலன்களில் அக்கறை கொள்ளும் தொண்டேயங்களும் தான் பொறுப்புக் கூற வேண்டும்.

குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காகத் தொழில் செய்தே ஆக வேண்டும் எனும் நிலையில் இத்தகு சிறுவர்கள் உள்ளனர்.இவர்களை இந்நிலைக்குத் தள்ளிவிடும் காரணிகளில் நடைபெற்று முடிந்த யுத்தம் முதன்மை பெறுகின்றது.

ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை அளித்துச் சென்றுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் இன்னமும் இயல்புநிலைகளுக்குத் திரும்பவில்லை என்றே கூற வேண்டும்.அவர்கள் அகங்களுள் ஆழப்பதிந்த வேர்களாய் ரணங்களும் வலிகளும் பதிந்துவிட்டன.இவர்களுக்குரிய 'ஆற்றுப்படுத்தல்கள்' அதிகம் தேவைப்படும் நிலையில் வெறும் கண் துடைப்பு நாடகங்களே நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான குடும்பங்களில் பிரதான குடியிருப்பாளரோ அன்றேல் குடும்ப வருமான மீட்டுபவரோ இல்லாத பட்சத்தில் அந்த வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு சிறுவர்கள் உழைக்கச் செல்கின்றனர். முதலில் வயிற்றுப் பசி, பின்னர்தான் அறிவுப் பசி என்று எண்ணும் இத்தகைய சிறுவர்களுள் எத்தனையோ அறிவாளிகள் புதையுண்டிருக்கலாம். கற்க வேண்டிய வயதில் பணத்திற்காகப் பஞ்சாய்ப் பறக்கும் இவர்களின் நிலைக்கு யார் பொறுப்புக் கூறப் போகின்றனர்?

தற்பொழுது மீள்குடியமர்த்தப்பட்டுள்ள வன்னி மண்ணில் 'சிறுவர் தொழிலாளிகள்' அதிகம் காணப்படுகின்றனர். மீள் குடியமர்வு எனும் போர்வையில் அங்கு விடப்படும் மக்களுக்கு எந்தவிதமான உதவித் திட்டங்களோ நிவாரணங்களோ வழங்கப்படாத நிலையில் குடும்ப சீவனோபாயத்தை அவர்கள் எவ்வாறு ஓட்டுவது? அத்துடன் குடும்ப வருமான மீட்டும் தலைவரும் இறந்தோ காணாமல் போயோ அன்றேல் தடுப்பிலோ உள்ள நிலையில் அவர்களின் குடும்ப வாழ்வாதாரம் எவ்வாறு அமையும்?இந்நிலையில் குடும்ப வறுமை காரணமாகக் கல்வியைத் தொடர முடியாத நிலைக்கு ஆளாகும் சிறுவர்கள் தங்களால் இயன்ற தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எமது நாட்டில் அதிகரித்து வருகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுள் 'சிறுவர் தொழிலாளிகள்' அதிக கவனத்தையீர்க்கும் கர்த்தர்களாகக் காணப்படுகின்றனர்.எமது நாட்டின் பிரதான சொத்து 'கல்வி'. இது பாரபட்சமின்றி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் எனும் நிலையில் C.W.W.கன்னங்கரவால் கல்வி இலவசமாக்கப்பட்டது. இந்நிலையில் தனியொருவனாகிய தான் கற்பதைவிட குடும்ப வறுமையைப் போக்க உழைப்பதே மேல் எனும் நிலைக்காளாக்கப்பட்டுள்ள சிறுவர்களின் நிலை....?

யாழ்.குடாநாட்டில் இத்தகு சிறுவர் தொழிலாளிகளின் பெருக்கத்திற்குப் பெரிதும் காரணமாக இருப்பது குடும்ப வறுமை மற்றும் குடும்பச் சீர்குலைவுகள் ஆகும்.இவற்றால் விரக்தியடைகின்ற சிறுவர்கள் தமது நலன் கருதியோ அல்லது எதிர்காலம் குறித்தோ அச்சம் கொள்ளாது 'கட்டறுத்த காளைகள்' போன்றே சுயேச்சையாகத் தொழிலுக்குச் செல்கின்றனர்.

இத்தகைய சிறுவர்கள் தேநீர்சாலைகள்,பலசரக்குக் கடைகள், துவிச்சக்கரவண்டி திருத்தகங்கள்,லாட்டறி டிக்கட் விற்பனை நிலையங்கள் மற்றும் சந்தைகளில் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். அத்துடன் தமது பெற்றோர் மேற்கொள்ளும் தொழிலுக்கு துணையாகவும் பணக்கார வீடுகளில் எடுபிடி வேலைகளுக்காகவும் அமர்த்தப்படுகின்றனர்.

பாடசாலைக்குச் செல்லும் வயதில் பாடசாலை செல்லாத சிறுவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் 16 வயது முதல் அனைவருக்கும் கட்டாயக்கல்வித் திட்டம் என்றும் ஒருபக்கம் ஊடகங்களில் செய்தி வெளிவரும்.சிறுவர்கள் நலன்களில் நாம் அதிக அக்கறை காட்டுகின்றோம் என்று மறுபக்கம் சிறுவர் நலன் சார்ந்த அமைப்புகள் தங்களை விளம்பரப்படுத்தி திரியும்.இரண்டிற்கும் நடுவினில் 'சிறுவர் தொழிலாளர்' தமது வறுமை ஒழிப்புப் போரில் செவ்வனே செயற்படுகின்றனர்.

உண்மையில் சிறுவர்களின் நலனில் அக்கறை கொள்ளும் தரப்பினர் யாராக இருந்தாலும் அவர்தம் கிராம மட்டங்களில் அணுகி அவர்களின் விபரங்களைத் திரட்டுகின்றனரா?அவர்களின் உண்மையான தேவைகளை அடையாளம் காண்கின்றனரா? 'வறுமை கல்விக்கு ஒரு தடையல்ல' என்று போதிக்கின்றனரா; அன்றேல் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை அணுகி 'ஆற்றுப்படுத்தல்கள்' மேற்கொள்கின்றனரா? அவ்வாறாயின் எந்த ரூபத்தில் அதனை அவர்கள் செய்கின்றனர்?

போரின் வடுக்களால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் உளவியல் தாக்கத்திற்குள்ளாகியிருப்பதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன. உளத்தாக்கத்தின் உச்ச நிலையில் அவர்கள் மரணத்தைத் தழுவ வேண்டியேற்படுகின்றது. இதுதான் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் வளர்ந்த க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் பயின்றுகொண்டிருந்த மாணவியான இரவீந்திரன் புஸ்பமலர் ஜெயந்திக்கும் [சாவி ரி] நடந்தது.

உளவியல் தாக்கம என்பது அபாயகரமானது.அதற்குரிய முறையில் ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தம் வயதொத்த பிள்ளைகள் பாடசாலை செல்லும் அதேவேளை தாம் வேலைக்குச் செல்வதால் மனவிரக்திக்காளாகும் சிறுவர்கள் [சிறுமிகளும் இதில் விலக்கல்ல] எதிர்காலங்களில் வன்முறையாளர்களாக மாறக்கூடிய சாத்தியப்பாடுகளும் உண்டு. இவற்றைச் சமூகம் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.

பிள்ளைகள் உலகமானது தனித்துவம் மிக்கது. எதிர்காலத்தில் இந்த உலகமே இல்லாது போய்விடுமோ எனும் நிலையில் இரு செயல்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் அளவு கடந்த வசதிகளும் மறுபக்கம் அளக்க முடியாத வறுமைகளும் என உலகம் எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது.

'வயிற்றுக்குச் சோறிட வேண்
டும்-இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்!'

என்றான் புரட்சிக்கவி பாரதி.ஆனால் இங்கு அனைவருக்கும் கல்வி என்று பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றதேயொழிய நடைமுறையில் இல்லை என்றே கூற வேண்டும்.

சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல் மூலம் அவர்களுக்குக் குறைந்தளவு வேதனம் வழங்கலாம் எனும் நிலையில் 'பெருந்தலைகள்' செயற்படுகின்றன. இத்தலைகள் அவர்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திப்பதில்லை.

ஆலயத் திருவிழாக்களில் பெருமளவிலான சிறுவர்கள் கச்சான் மற்றும் கற்பூர விற்பனைகளில் ஈடுபட்டு வரும் அதேநேரம் மணிக்கடை வியாபாரத்திலும் தின்பண்ட வியாபாரத்திலும் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது. அண்மையில் நடைபெற்று முடிந்த நல்லைக்கந்தன் திருவிழாவில் கூட இத்தகையோரைக் காண முடிந்தது.

கச்சான் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் ஒரு சிறுவனிடம் அவனது கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் விசாரிக்கையில் மனந்திறந்து பேசுவதற்கு முதலில் மறுத்தான். பின்னர் பேசுகையில் 'எனக்கு இப்போது 16 வயது ஆகின்றது. கடந்த 4 வருடங்களுக்கு முன்னரே என்னைப் பாடசாலை செல்லவிடாது பெற்றோர் இடைநிறுத்தினர். அன்று தொட்டு எனது தந்தையாருடன் கச்சான் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன்' என்றார். இதேநேரம் அவர் கல்வியை இடைநிறுத்துவதற்கு காரணம் குடும்ப வறுமை என்றும் தெரியவந்துள்ளது.

இதேபோன்று ஜீவன் எனும் 16 வயதுடைய சிறுவனிடம் வினவிய வேளை;

'எனது வீட்டில் கல்வி கற்க முடியாத சூழ்நிலையால் நான் வேலைக்குப் போவதற்கு முடிவெடுத்துள்ளேன். தினமும் தந்தையார் மது போதையில் வந்து சண்டை போடுவார். உழைக்கும் பணமெல்லாம் இதற்கே அவர் செலவழிக்கின்றார். பொழுது விடிந்தால்... உணவுக்குப் போராடும் நிலையே குடும்பத்தில் காணப்படும். இதனால் நான் வேலைக்குப் போகின்றேன்' என்றார்.

இவ்வாறு நாடளாவிய ரீதியில் சிறுவர் தொழிலாளர்கள் அதிகரித்து வருவதனால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. அறிவாளிகளாகி ஒளிபரப்ப வேண்டியவர்கள் தொழிலாளிகளாகித் தம் வாழ்வையே சூன்யமாக்கி வருகின்றனர். இவ்விடயத்தில் சிறுவர் நலன்சார் அமைப்புகள் அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**எஸ். ருடனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் 1 இல் எந்திரன்



எந்திரன் படம் விரைவில் வரும் என்று திரும்பத் திரும்ப சொல்கிறார்களே தவிர, என்ன திகதி என்று மட்டும் சொல்ல மாட்டேங்குறாங்களே, என ரஜினி ரசிகர்கள் கட்டுப்படுத்த முடியாத ஆர்வத்துடன் சலித்துக் கொள்கிறார்கள். இப்போது அவர்களின் சலிப்பை களிப்பாக்கும் விதத்தில் அக்டோபர் 1 ஆம் திகதி எந்திரன் உலக முழுக்க வெளியிடுகிறது சன் பிக்சர்ஸ் நிறுவனம். ஆரம்பத்தில் செப்டெம்பர் 24 ஆம் திகதி இந்தப் படம் வெளியாகும் என்று கூறப்பட்டது. இந்தி ட்ரைலரிலும் அதேபோல அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ் ட்ரைலரில் வெளியீட்டுத் திகதி குறிப்பிடப்படாமல் 'விரைவில் வருகிறது' என்று மட்டும் குறிப்பிட்டிருந்தனர். இப்போது கிராபிக்ஸ் பணிகளின் இறுதிக் கட்டத்தில் உள்ளது எந்திரன் டீம்.செப்டெம்பர் 24 ஆம் திகதிக்குள் அனைத்துப் பணிகளும் முடிந்துவிடும் என்றும், அக்டோபர் முதல் திகதி உலகம் முழுக்க எந்திரன் வெளியாகும் என்றும் சன் பிக்சர்ஸ் தரப்பில் விநியோகஸ்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தி ரோபோவை மிகப் பிரமாண்டமாக வெளியிடுகிறார்கள். 1000 க்கும் மேற்பட்ட பிரிண்டுகள் இந்தியில் வெளியாகின்றன. இந்தி ரோபோவுக்கு போட்டியாக வேறு எந்த இந்திப் படமும் வெளியாகவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

## தொடையில் து...



கலக்கல் பாட... ஒரு படத்திற்காக... தொடையில் பி... கியை பச்சை கு... ஹொலிவுட்டின்... ரிஹானா. இவர்... பரபரப்பை ஏற்படு... அவர் தனது தொ... யுள்ள பச்சை. ... பேட்டில்ஷிப் ... நடிக்கிறார். இ... வலது தொடை... சற்று கீழே ஒ... பச்சை குத்தி... போல தனது... வெகு அருகேயும் ஒரு குட்டி பிஸ்டலை பச்... ஆனால் இது நிரந்தரமானதில்லையாம். பட... பிறகு இதை அழித்து விட முடியுமாம். படத்... இந்த பச்சை என்கிறார் ரிஹானா. ஏற்கனவே... பில் ஏகப்பட்ட அயிட்டங்களை பச்சை குத்... படுத்தி வைத்திருப்பவர் ரிஹானா என்பது கு... தற்போது அவர் குத்தியுள்ள பிஸ்டல் பச்சை... பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் வ... வந்த அவர் பிகினி உடையில் காட்சி அளித்த... பச்சை மேட்டர் வெளியில் தெரிந்தது.

## Saturday சினிமா



## தூங்கவி...

மைனா படம் பார்த்து விட்டு இரண்டு நாட்கள் நான் தூங்கவே இல்லை. அப்படியொரு பாதிப்பை எனக்குள் ஏற்படுத்தியது அந்தப் படம் என... றார் தயாரிப்பாளர் உதயநிதி. பிரபு சாலமன் இயக்கத்தில், ஷாலோம் ஸ்டூடியோஸ் தயா...

## எல்லாப் புகழும் சாமிக்கே

18 வருடங்களாக சினிமாவில் ஜெயிக்க போராடி வந்தேன். ஆனால் சிந்து சமவெளி எனக்கு பெரும் பெயரைக் கொடுத்து விட்டது. அனைத்துக்கும் காரணம் இயக்குநர் சாமிதான் என்று பாராட்டுகிறார் மருமகளை தனது மாய வலையில் வீழ்த்தும் மாமனார் வேடத்தில் நடித்துள்ள நடிகர் கஜினி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள சிந்துசமவெளி படத்தில் மருமகள் மீது காமம் கொண்டு கள்ளக்காதலில் ஈடுபடும் மாமனார் வேடத்தில் நடித்திருப்பவர் கஜினி. இவரது ஒரிஜினல் பெயர் குமரேசனாம். திருவண்ணாமலை மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்தவர். சினிமாவில் நடிப்பதற்காக 18 வயதிலேயே சென்னைக்கு வந்து விட்டார். வந்தவருக்கு இதுவரை வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. திரைப்படக் கல்லூரியில் படித்தவர் கஜினி. இவரை சாமிதான் தனது படத்தில் நடிக்கும் வாய்ப்பைக் கொடுத்தார். இதன் மூலம் இன்று பிரபலமாகிவிட்டார். இதுவரை போராடி வந்தேன். சாமி சார் படம் தான் எனக்கு பெரும் அடையாளத்தைக் கொடுத்துள்ளது. இந்தப் புகழுக்குக் காரணம் அவர்தான் என்கிறார்.




## மணிரத்னத்துக்கு மரியாதை



வெனிஸ் திரைப்பட விழாவில் விருது வாங்கி தமிழ் திரையுலகுக்கு பெருமை சேர்த்திருக்கிறார் மணிரத்தினம். இது வரை எந்த தமிழ்ப்பட இயக்குனருக்கும் இதுபோன்ற பெருமை கிடைத்ததில்லை. விருது வாங்கி சென்னை திரும்பிய மணிரத்னத்துக்கு தமிழ்ப்பட இயக்குனர்கள் மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். பாலுமகேந்திரா தலைமையில் மணிரத்தினம் அலுவலகத்துக்கு சென்ற அவர்கள் அவருக்கு பூங்கொத்து கொடுத்து தங்களது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். பாலுமகேந்திராவுடன் பாக்யராஜ், வசந்த், ஆர்.கே.செல்வமணி, லிங்குசாமி, விக்ரமன் உள்ளிட்ட ஏராளமானோர் மணிரத்னத்துக்கு மரியாதை செய்தனர்.



## ஸ்ரீகாந்தின் மகிழ்ச்சி



நீண்ட நாட்களுக்குப் பிறகு ஸ்ரீகாந்தின் முகத்தில் நிம்மதியின் மகிழ்ச்சியை பார்க்க முடிகிறது. துரோகி தமிழகம் முழுவதும் பரவலான வரவேற்பை பெற்றதுதான் இதற்குக் காரணம். சுதா பிரசாத் இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் ஸ்ரீகாந்துடன் விஷ்ணு நடித்துள்ளார். சென்னை ராயபுரத்தை மையமாக வைத்து இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ராயபுரம் பகுதிக்கே சென்று அங்குள்ளவர்களுடன் பழகி அவர்களின் வாழ்க்கை, மேனரிசங் [illegible] துரோகி படத்துக்காக ஸ்ரீகாந்த் பத்து கிலோ [illegible] இப்போது படமும் [illegible] வேடமும் பேசப் [illegible] இருக்க என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...் துப்பாக்கி

...லக்கல் பாடகியான ரிஹானா,
... படத்திற்காக தனது வலது
...டையில் பிஸ்டல் துப்பாக்
...ய பச்சை குத்தியுள்ளார்
...ாலிவுட்டின் கவர்ச்சிப் பாடகி
...னா. இவர் இப்போது புதிய
...பை ஏற்படுத்தியுள்ளார். அது,
...தனது தொடையில் குத்தி
...ள பச்சை. ரிஹனா தற்போது
...ட்டில்ஷிப் என்ற படத்தில்
...டிக்கிறார். இதற்காக தனது
...லது தொடையில், இடுப்புக்கு
...ற்று கீழே ஒரு பிஸ்டலை
...ச்சை குத்தியுள்ளார். அதே
...போல தனது வலது மார்புக்கு
...ஸ்டலை பச்சை குத்தியுள்ளார்.
...லயாம். படப்பிடிப்புக்குப்
...மாம். படத்திற்காக மட்டுமே
...ா. ஏற்கனவே தனது உடம்
... பச்சை குத்தி பரபரப்பை ஏற்
...ா என்பது குறிப்பிடத்தக்கது.
...டல் பச்சை சற்றே கூடுதல்
...சமீபத்தில் ஹானலூலுவுக்கு
...ாட்சி அளித்தபோதுதான் இந்த
...ந்தது.

## நான் அசின் அல்ல பூர்ணா



ஆளாளுக்கு என்னை அசின் என்று வர்ணிக்கிறார்கள். ஆரம்பத்தில் அது கேட்க நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும் இப்போது அப்படி என்னைச் சொல்ல வேண்டாம். எனக்கென்று ஒரு தனி ஸ்டைலைப் பின்பற்ற விரும்புகிறேன் என்கிறார் நடிகை பூர்ணா, முனியாண்டி விலங்கியல் மூன்றாம் ஆண்டு பட விழாவில் நடிகர் விஜய் ஆரம்பித்து வைத்தது இந்த அசின் ஒப்பீடு. இது பற்றி பூர்ணா கூறுகையில், 'எங்கே போனாலும், நீங்க அசின் மாதிரியே இருக்கீங்க' என்று ரசிகர்கள் ஆட்டோகிராப் கேட்கிறார்கள். முதல்ல பெருமையாத் தான் இருந்தது. வெளிப்புற படப்பிடிப்புக்கு செல்லும் போது அசின் வந்திருக்காங்க என்று எல்லோரும் பார்க்க வருகிறார்கள். அசினை ஒரு விழாவில் சந்தித்தபோது நீங்க என்னை மாதிரியே இருக்கீங்கன்னு சொன்னாங்க ஆனால், அது மட்டுமே போதாதல்லவா. நடிப்பில் எனக்குன்னு தனி ஸ்டைல் வேணும்னு நினைக்கிறேன். அப்போதுதான் அடுத்து வருகிறவர்கள் இவங்க பூர்ணா மாதிரி நடிக்கிறாங்கன்னு சொல்லுவார்கள். அதைத்தான் நான் விரும்புகிறேன். ஆனால் இனி என்னை அசினோட ஒப்பிட வேண்டாம் என்கிறார்.

## ...கவிடாத 'மைனா'

...ம் பார்த்து
...ட்கள் நான்
...். அப்படி
...னக்குள்
...தப் படம் என்
...உதயநிதி
...க்கத்தில்,
...யோஸ் தயா

ரித்துள்ள படம் 'மைனா'. இந்த படம் முழுக்க முழுக்க அத்துவான காட்டுக்குள் படமாக்கப்பட்டுள்ளது. நடைமுறை நவீன உலகுக்கும் இந்தப் படத்தின் கதைக் களத்துக்கும் சம்பந்தமே இல்லை எனும்படி வித்தியாசமாக படமாக்கியுள்ளனர். விதாரத் என்ற சுவத்துப்பட்டறை கலைஞரும், அமலா பால் என்ற அனகாவும் ஜோடியாக நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்தை ரெட்ஜெயண்ட் மூவீஸ் உதயநிதி ஸ்டாலின், ஏ.ஜி.எஸ். எண்டர்டெய்ன் மெண்ட் கல்பாத்தி எஸ். அகோரம் ஆகிய இருவரும் இணைந்து வெளியிடுகிறார்கள். இதுபற்றிய அறிமுக கூட்டம், சென்னை பார்க் ஷெராட்டனில் நடந்தது. கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பேசும்போது, 'மைனா படம் பார்த்துவிட்டு, 2 நாட்கள் நான் தூங்கவில்லை. அந்த அளவுக்கு படம் எனக்குள் பாதிப்பை ஏற்படுத்தியது. அதனால்தான் ரெட் ஜெயண்ட் நிறுவனம் இந்த படத்தை வாங்கியது' என்றார்.



எந்திரன்—ஐஸ்வர்யாராய்



போடா போடி—சிம்பு, விஜயலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியம்... ஆனால் உண்மை



உலக அளவில் எதனால் இறப்பு அதிகம் நிகழ்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?எயிட்ஸ்?புற்று நோய்? மது? இவற்றில் எதுவும் இல்லை கீழேதவறி விழுந்து அடிபடும் சம்பவங்களில் தான் இறப்பு வீதம் அதிகம் நிகழ்கிறது. உலக சுகாதார மையத்தின் அறிக்கை இப்படித்தான் சொல்கிறது.

உலக சுகாதார மையம் கீழே தவறி விழுபவர்களைப் பற்றிய அறிக்கை ஒன்றை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.அதில் வீதி விபத்துக்கு அடுத்து கீழே விழும் சம்பவங்களில்தான் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த சம்பவங்களில் அதிகம் இறப்பது ஆண்கள் தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;கீழே தவறி விழுவதால் ஒன்று இறப்பு அல்லது ஏதாவது ஒரு வகையில் முடம் ஆகியவிளைவுகள் ஏற்படுகின்றன.இதில் ஆண்கள்தான் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் பணியிடச் சூழல்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் இதற்குக் காரணங்களாகின்றன. மேலும் கீழே விழுந்து அதனால் காயம் ஏற்பட்டால் அது முற்றும் வரை ஆண்கள் அதை கவனிப்பதில்லை. அவர்கள் ஏணி, உயர்ந்த கட்டடம்,கூரைகளில் ஏறுதல் போன்ற கடினமான ஆபத்தான வேலைகளை மேற்கொள்வதால் அடிக்கடி கீழே விழுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில் கீழே விழுவதால் நான்கு இலட்சத்து 24 ஆயிரம் பேர் பலியாகின்றனர். இதில் 80 சதவீதம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் இருக்கும் நாடுகளில் அதாவது மேற்கு பசுபிக் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் தான் நிகழ்கிறது.

வயதானவர்களை விட இளம்வயதில் கீழே விழுந்து பலியாகிறவர்களின் எண்ணிக்கை உலகளவில் அதிகமாக உள்ளது. கீழே விழுபவர்களில் மூன்று கோடியே 73 இலட்சம் பேர் தீவிர சிகிச்சைக்குப் பின் தேறுகின்றனர். மாறாக ஒரு கோடி 70 இலட்சம் பேர் ஏதாவது ஒரு வகையில் முடமாகிவிடுகின்றனர். கீழே விழுவதால் ஏற்படும் நோய்களுக்கு 65 வயதுக்கு மேற்பட்டோர்தான் பெரும்பாலானோர் ஆளாகின்றனர்.

அதேபோல் 15 லிருந்து 29 வயது வரை உள்ளவர்களும் 15 வயதுக்கு குறைந்த சிறுவர்களும் அடிக்கடி கீழே விழுகின்றனர்.

சமூக பொருளாதார நிலைக்கும் கீழே விழுந்து அடிபடுவதற்கும் தொடர்பிருக்கிறது. குறைந்த சம்பளம் உள்ள நாடுகளில் மக்கள் கடினமான வேலைபார்க்க நேரிடுவதால் அடிக்கடி கீழே விழ நேரிடுகிறது. வயதானவர்கள் குறிப்பாக தனியாக இருக்கும் வயதான பெண்கள் அல்லது கிராமப்புறத்தில் நிலையற்ற குறைவான சம்பளம் பெறுபவர்கள்தான் இந்த சிக்கலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.மோசமான சுகாதாரம், உணவு,சிகிச்சை பெறக்கூடிய வசதியின்மை போன்றவையும் இச்சிக்கலை அதிகப்படுத்துகின்றன. பொதுவாக வீடுகளில் வாழும் வயதானவர்களை விட முதியோர் காப்பகம் மற்றும் மருத்துவமனைகளில் இருக்கும் வயதானவர்களுக்குத்தான் கீழே விழும் வாய்ப்பு அதிகம் உள்ளது. தனிமை, மனஅழுத்தம் போன்றவை இதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை உருவாக்கியவர் யார்?

இந்த உலகை உருவாக்கியது கடவுள் அல்ல. உலகம் உருவாக இயற்பியல் கோட்பாடுகளின் விளைவுகளே காரணம் என்று கூறியுள்ளார் உலகப் புகழ் பெற்ற இங்கிலாந்து இயற்பியலாளர் பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங்.

*Muscular dystrophy* எனும் உடலியல் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவரான ஹாக்கிங், விண்வெளியியல் ஆய்வுக்கு ஆற்றிய சேவை மிகப் பெரியது. பிளாக் ஹோல்ஸ் குறித்த இவரது ஆய்வு மிகப்பெரியது. இவர் எழுதிய 'த பிரீப் ஹிஸ்டரி ஒப் டைம்' என்ற புத்தகம் மிகப் பிரபலமானது.

உலகம் உருவானதற்குக் காரணமாக பிக் பாங் குறித்த கருத்தையும் மற்றும் அதற்கு முந்தைய காலகட்டத்தையும் இதில் அவர் விளக்கியுள்ளார்.

இங்கிலாந்தின் சன்டே டைம்ஸ் இதழின் சிறந்த புத்தக வரிசையில் தொடர்ந்து 237 வாரங்கள் முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தது இந்தப் புத்தகம். தற்போது ஹாக்கிங் தகவலை வெளியிட்டுள்ளார். அது இந்த உலகத்தை கடவுள் உருவாக்கவில்லை. மாறாக, இயற்பியலின் விதிகளே உலகம் உருவாகக் காரணம் என்று கூறியுள்ளார்.

இயற்பியலின் தவிர்க்க முடியாத விதிகளின் விளைவுகளால்தான் இந்த உலகம் உருவானதாக தனது சமீபத்திய 'தி கிராண்ட் டிசைன்' (*The Grand Design*) என்ற நூலில் எழுதியுள்ளார் ஹாக்கிங்.

இது குறித்து ஹாக்கிங் கூறுகையில், 'இந்த உலகம் உருவாகுவதற்கு முன்பு அவ்வளவு பெரிய பிரமாண்டமான வெற்றிடம் இருந்தது. எனவே யாரும் வந்து பூமியை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுவாகவே தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளது. இந்த உலகம் இது முற்றிலும் இயற்பியல் சார்ந்ததே.

சுருக்கமாகச் சொன்னால் இந்த உலகம் சுயம்புவாக உருவானது. இதை உருவாக்க கடவுளுக்கு அவசியம் இல்லை. நமது உலகின் அன்றைய நிலை, இன்றைய நிலை, நாம் இந்த உலகத்தில் வாழ முடிவது என அனைத்துக்குமே ஏதாவது ஒரு காரணம் உள்ளது. எதுவுமே மர்மம் இல்லை. எல்லாமே அறிவியல் சார்ந்தது.

உலகம் தானாக உருவாகவில்லை. அதை உருவாக்கியவர் கடவுள்தான், கடவுளின் சக்திதான் உலகை உருவாக்கியது என்பது தவறு, அது சாத்தியமில்லை. கடவுள் வந்து தொட்டுக் கொடுத்து 'ஏ உலகே உருவாகு' என்று கூறினார் என்று சொல்வது அபத்தமானது என்று கூறியுள்ளார் ஹாக்கிங்.

அதேசமயம், 1998 இல் ஹாக்கிங் எழுதிய 'த பிரீப் ஹிஸ்டரி ஒப் டைம்' நூலில், பூமியின் உருவாக்கலில் கடவுளுக்கும் பங்கு இருக்கலாம் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. அதில், உலகின் முழுமையான வரலாற்றை நாம் பார்க்கும்போது, அது முற்றிலும் மனிதகுலத்தின் வெற்றியாக கூறிக் கொள்ள முடியும். அதில் கடவுளுக்கும் ஒரு இடம் இருக்கலாம் என்று கூறியிருந்தார் ஹாங்கிங்.

ஆனால் தற்போது முற்றிலும் இது இயற்பியல் சார்ந்த நிகழ்வு என்று அடித்துக் கூறியுள்ளார் ஹாங்கிங்.

தனது புதிய புத்தகத்தில் அவர் கூறுகையில், 'பிக் பாங் காரணமாக சூரிய குடும்பமும் கோள்களும் உருவாகின. பூமியும் உருவானது. இதற்குக் காரணம் இயற்பியலின் விதிகளால் ஏற்பட்ட விளைவுகளே. இங்கு கடவுளுக்கு எங்குமே இடமில்லை. முற்றிலும் அறிவியல் சார்ந்த நிகழ்வு இது.

என் முன் இரண்டு கேள்விகளை வைக்கிறேன். முதல் கேள்வி, நம்மால் புரிந்து கொள்ள முடியாத காரணங்களுக்காக கடவுள் இந்த உலகை உருவாக்கினாரா என்பது.

2 ஆவது கேள்வி, அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் உலகம் உருவானதா என்பது. இதில் நான் 2 ஆவது கேள்வியையே ஆதரிக்கிறேன். நீங்கள் விரும்பினால் அறிவியலின் கோட்பாடுகளை 'கடவுள்' என்று கூறிக் கொள்ளலாம். அதேசமயம் இதைத் தவிர வேறு எந்த கடவுளும் உலகத்துக்கு உரிமை கொண்டாட முடியாது என்பது எனது கருத்து' என்கிறார் ஹாக்கிங்.


இருப்பினும் பல விடயங்கள் இன்னும் புரியாத புதிராகவே உள்ளது. குறிப்பாக பிளாக் ஹோல்கள். இந்த 'இருண்ட சக்தி' உலகம் உருவானபோது ஏற்பட்டதா அல்லது உலகம் உருவானபோது அழிந்து போனதன் மிச்சமா என்பது இதுவரை விளங்கவில்லை.

தற்போதைக்கு உலகின் வரலாறு குறித்து உலக அளவில் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ள ஒரே முடிவு பிக் பாங் தியரி மட்டுமே மிகப் பெரிய வெடிப்புப் பிரளயத்தை தொடர்ந்து இந்த உலகம் உருவானதாக இந்த பிக் பாங் தியரி கூறுகிறது. 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பேரண்ட வெடிப்பு நடந்ததாக கடந்த ஆண்டு கணித்துக் கூறப்பட்டது.

தற்போது வெளியாகியிருக்கும் ஹாக்கிங்கின் நூலும் உலக வரலாறு குறித்த புதிய பார்வைக்கு வித்திடும் என்கிறார்கள்.


அமெரிக்காவைச் சேர்ந்த இயற்பியலாளர் லியோனார்ட் லோடினோவுடன் இணைந்து இந்த நூலை எழுதியுள்ளார் ஹாக்கிங். இந்நூல் கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியானது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்க... சிந்திக்க...!













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## உலகின் மிகப் பழைமையான சப்பாத்து கண்டெடுப்பு



அர்மீனியா நாட்டில் உள்ள ஒரு குகையில் உலகின் மிகவும் பழைமையான சப்பாத்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. அர்மீனியா நாட்டைச் சேர்ந்த டயானா சர்டர்யான் என்ற தொல்பொருள் ஆய்வு மாணவி 2008 ஆம் ஆண்டு குகையில் ஆய்வு செய்தபோது ஒற்றை சப்பாத்தை கண்டுபிடித்தார். அதனுடன் ஒரு உடைந்த பானை, செம்மறியாட்டின் கொம்பு உள்ளிட்ட பொருட்களையும் கண்டுபிடித்தார்.

தோலினாலான அந்தச் சப்பாத்து 400 அல்லது 500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாமென்று தொல்பொருள் ஆய்வுத்துறையினர் தோராயமாக கணக்கிட்டனர். ஆனால், அதன் உண்மையான காலத்தை கண்டுபிடிப்பதற்கான ஆய்வுகள் கலிபோர்னியாவிலுள்ள ஒரு ஆய்வு கூடத்திலும் இங்கிலாந்தில் உள்ள ஒரு ஆய்வு கூடத்திலும் நடைபெற்றது.அண்மையில் ஆய்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில் அந்த சப்பாத்து 5,500 ஆண்டுகளுக்கு முந்தையது என்று கூறப்பட்டுள்ளது.


இதுதொடர்பாக தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கூறியதாவது; பசுவின் தோலினாலான இந்தச் சப்பாத்து 24.5 செ.மீ.நீளமும் 10.செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. இது ஆணுடையதா அல்லது பெண்ணுடையதா என்பது தெரியவில்லை.5,500 ஆண்டுகள் பழைமையானது. ஆச்சரியம் என்னவெனில் சப்பாத்தில் லேஸ் கூட பாதுகாப்பாக உள்ளது தான். இந்த சப்பாத்து சால்கோலித்திக் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாமென்று கருதப்படுகிறது. இந்த சப்பாத்து கண்டுபிடிக்கப்பட்ட குகை அர்மீனியா நாட்டிலுள்ள வயோட்ஸ் டிசார் என்ற மாகாணத்தில் உள்ளது. இந்த மாகாணம் அர்மீனியா, ஈரான், துருக்கி நாடுகளின் எல்லைக்கு அருகில் அமைந்துள்ளது.

இந்தக் குகை வெயில், மழை,பனி உள்ள எந்தக் காலநிலையிலும் பாதிப்படையாதவாறு இயற்கையாகவே பாதுகாப்பான இடத்தில் அமைந்துள்ளது. அதன் உட்பகுதியில் செம்மறியாடுகளின் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. இந்த சப்பாத்துடன் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்களும் ஓரளவு நல்ல நிலையிலேயே இருக்கின்றன. அங்கு கிடைத்த மற்பாண்டங்களில் கோதுமை,பார்லி, இலந்தை விதைகள் உள்ளிட்ட சில தானிய விதைகளும் கிடைத்தன. இவ்வாறு ஆய்வுத்துறையினர் கூறினர்.

# வைரத்தாலான கிரகம்

## அதிர்ச்சியில் விஞ்ஞானிகள்

பூமியில் வைரக் கற்கள் பெரும் விலைக்கு விற்கப்படும் ஒரு பொருள். சிறிய குண்டூசியளவு வைரக் கல் கூட பல இலட்சம் விலை பெறுமதியானது. அத்தோடு, இதுவரை காலமும் உலகில் தோண்டி எடுக்கப்பட்ட வைரக் கற்களில் மிகப்பெரியது என்று கருதப்படுவது கோகினூர் வைரம் என்றழைக்கப்படும். அதன் அளவு ஒரு தேசிக்காயின் அளவை ஒத்தது. அது பல மில்லியன் டொலர் பெறுமதி. ஆனால் அண்டவெளியில் உள்ள ஒரு கிரகம் வைரத்தால் ஆனது என தற்போது விஞ்ஞானிகள்



கண்டுபிடித்துள்ளனர். சுமார் 4 ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவு மட்டுமே கொண்ட இக்கிரகம் முழக்க முழுக்க வைரக் கல் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சாதாரணமாக காபன் என்னும் மூலப்பொருள் இறுக்கமடைந்து பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் வைரக் கல்லாக மாறுகிறது. தங்கத்தை கரட் கொண்டு 24 கரட் அல்லது 18 அல்லது 9 கரட் என்பது போல வைரத்தை அதன் அடர்த்தியை வைத்தே மதிப்பிடுவார்கள். சுமாரான வைரக் கற்கள், 0.05 கரட் ஆக இருக்கும். 1 கரட் வைரக் கற்கள் மிகுந்த விலையானவை. அதிலும் 2 கரட் என்றால் அதி உச்ச விலை மதிப்பானவை. ஆனால், அண்ட வெளியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வைரக் கிரகத்தில் உள்ள வைரத்தின் அடர்த்தி என்ன என்று கேட்டால் பூமியில் உள்ளவர்கள் தலைசுற்றி விழுவது நிச்சயம்.

அந்த வைரத்தின் அடர்த்தி சுமார் 1 மில்லியன் கரட் ஆகும். அக் கிரகத்தில் இருந்து எடுக்கப்படும் ஒரு சிறு அணுத்துகள் கூட பூமியில் பல மில்லியன் பெறுமதியாக இருக்கும். ஒரு [illegible] குடும்பத்தில் உள்ள சூரியனைப் போல ஒளிர்விட்டு எரிந்த இச் சிறுகிரகம். தற்போது அணைந்து மிகவும் குளிர்ந்து இறுகி வைரக் கட்டியாக மாறியுள்ளதாம். அது பூமியில் இருந்து 50 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருக்கிறது. அக்கிரகத்திற்கு எந்த நாடு முதலில் தனது செய்மதியை அனுப்பப்போகிறதோ தெரியவில்லை. அப்படி ஒரு நாடு அனுப்பினால் அந்நாடே உலகில் செல்வம் மிக்க நாடாகத் திகழும்.

ஆனால், 50 ஒளியாண்டுகள் என்றால் என்ன என்று தெரியுமா?

ஒளி சுமார் 1 இலட்சத்து 87 ஆயிரம் மைல் தூரம் செல்லும் 1 செக்கனுக்கு. அப்படியானால் 1,87,000-ஐ 60 ஆல் பெருக்கி அதை 24 ஆல் பெருக்கி வரும் விடையை 365 ஆல் பெருக்கினால் வரும் தூரமே ஒளியாண்டு ஆகும். அப்படி என்றால் 50 ஒளியாண்டுகள் என்றால் எவ்வளவு தூரம் வரும் என்று நீங்களே கணக்குப் பார்த்து மண்டையைப் பிய்த்துக் கொள்ளலாம். இதைத்தான் கண்ணுக்கு எட்டியது கைக்கு எட்டாமல் போய்ச்சு என்று சொல்வார்கள். டெலஸ்கோப்பில் பார்த்து மகிழலாம் . ஆனால், போவது நடக்காத காரியம்.



## கர்ப்ப காலத்தில் கவலை அடையும் பெண்களுக்கு எடைகுறைவான குழந்தை பிறக்குமாம்

சுவீடனில் உள்ள கரோலின்ஸ்கா நிறுவன ஆராய்ச்சியாளர்கள், வங்காளதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழும் கர்ப்பிணி பெண்களிடம் ஆய்வு மேற்கொண்டனர். குழந்தை பிறப்பதற்கு முன்பு 6 முதல் 8 மாத கர்ப்பிணிகள் 720 பேரிடம் இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

அப்போது அவர்களில் பலர் வறுமை, குடும்பப் பிரச்சினை போன்ற பலவித சூழ்நிலைகளால் மன அழுத்தம் மற்றும் கவலையுடன் இருந்தனர். சில மாதங்கள் கழித்து அவர்களுக்கு குழந்தை பிறந்தது.

அவர்களின் மனக் கவலையுடன் இருந்த கர்ப்பிணிகளுக்கு மிகவும் எடை குறைந்த குழந்தைகள் பிறந்து இருந்தன. இவ்வாறு பிறந்த குழந்தைகள் இறந்தன.

எனவே, கர்ப்பகாலத்தின் போது பெண்கள் மனக் கவலை எதுவுமின்றி மகிழ்ச்சியாக இருந்தால்தான் ஆரோக்கியமான அதிக எடையுடன் கூடிய குழந்தை பிறக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விண்வெளியில் எப்படி நடக்கிறார்கள்?

அன்றாட வாழ்வில் தரையில் நடக்கும்போதே நாம் சிலவேளைகளில் தடுமாறுகிறோம். அப்படியிருக்கும்போது விண்வெளியில் எப்படி விண்வெளி வீரர்கள் நடக்கிறார்கள்?



சாதாரணமாக நாம் நடப்பதற்கு மூளை மிகவும் உதவுகிறது. நமது தசைகள், காதுகள், கண்கள் ஆகியவை நம்மைச் சுற்றி நடக்கும் தகவல்களைச் சேகரித்து உடனுக்குடன் மூளைக்கு அனுப்புகின்றன. மூளை அதற்கேற்ப உடலின் பல பகுதிகளுக்கும் கட்டளைகளை அனுப்பி நாம் சமநிலையில் நடப்பதற்கு உதவுகிறது.

ஆனால், விண்வெளியில் நடப்பது என்பது சாதாரண விடயமல்ல. அதற்கென பல கடுமையான பயிற்சிகளை விண்வெளி வீரர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். முதலில் சுழலும் நாற்காலி ஒன்றில் அவர்களை அமரவைத்து 10 நிமிடம் சுழலவிட்டுப் பின்னர் அதிலிருந்து இறக்கிவிட்டு மேடையில் மெதுவாக நிற்கச் சொல்கிறார்கள். அவ்வாறு செய்யும் போது உடனடியாக நிற்க முடியாதுதான். ஆனால் தொடர்ந்து பயிற்சி மேற்கொள்ளும் போது மூளை அதற்கேற்ப கட்டளைகளை இடுகிறது. இது போன்ற பயிற்சிகளைப் பெற்ற பின் விண்வெளி வீரர்களுக்கு விண்வெளியில் நடப்பது சுலபமாகிறது.

ஆனால், விண்வெளி வீரர்கள் விண்வெளிக்குச் சென்று அங்கே நடந்துவிட்டுப் பூமிக்குத் திரும்பும்போது இங்கே நடக்கச் சிரமப்படுவார்கள். தலைவலி, உடல்நலம் பாதிக்கப்படுதல், தள்ளாட்டம் போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாவார்கள். சில நாட்கள் கழித்துத்தான் அவர்களால் இயல்பு நிலைக்கு வரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# ஏழையின் கனவு

கே.எல்.நஜீமா ஹில்மி,
சம்மாந்துறை-10



கிராமத்தில் மிகவும் வறிய குடும்பம் என்றால் அது சஹியாவின் குடும்பம் தான். எனினும் எப்படியாவது தனது மகனை படிக்க வைத்து ஒரு நல்ல நிலைக்கு கொண்டு போக வேண்டுமென தினமும் ஆசைப்பட்டுக்கொண்டிருப்பாள்.ஆனால் அவளின் ஆசை கனவாகவே போகின்றது.அதற்குத்தடையாக வறுமை இருந்தது.

சஹியாவின் மகன் நபீஸ் நன்றாக படிக்கக்கூடியவன். வகுப்பில் அவனே முதலாம் இடத்தைப் பிடித்துக்கொள்வான். கலைத்துறையிலும் நன்கு திறமை வாய்ந்தவன் .சித்திரம் வரைவது என்றால் நபீஸுக்கு கைவந்த கலை.எவ்வளவு திறமை இருந்தாலும் பொருளாதாரம் இல்லையே என எண்ணி கவலைப்படுவான்.நபீஸ் சாதாரண தரம் படிக்கிறான். காலையில் பாடசாலை செல்லும் முன் தாய் சுடும் அப்பத்தைக் கிராமத்திலுள்ள கடைகளுக்கு கொடுத்துவிட்டுத்தான் பாடசாலைக்குப் போவான்.

ஒருநாள் காலையில் சஹியா அப்பம் சுட்டு வைத்துவிட்டு என்ன இன்னும் இவன் எழும்பல. நபீஸ் நேரம் போகுது ஸ்கூலுக்குப் போகலயா எழும்பு என நபீஸை எழுப்பினாள். ம்..ம்.. என்னம்மா நான் இன்டைக்கு ஸ்கூலுக்குப் போகல இன்டைக்கு கலர் கொப்பிகொண்டு போகலன்னா சேர் அடிப்பாரு எந்த நாளும் எனக்கு அடிவாங்கேலா உம்மா என கவலையோடு தனது தாயைப் பார்த்து பதிலுரைத்தான் நபீஸ்.இதனைக் கேட்ட சஹியாவின் கண்ணிலிருந்து கண்ணீர் கசியத் தொடங்கிற்று. மகன் படித்து சமூகத்தில் ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற அவளுடைய ஆசைக்கு வறுமை இடமளிக்க மறுத்தது.எவ்வளவு வறுமை நிலையில் இருந்தாலும் நபீஸ் சாதாரண தரம் வரை வந்துவிட்டான். அப்படிப்பை மேலும் தொடருவதற்கு போதிய பொருளாதார வசதியில்லாததால் நபீஸ் சீராக பாடசாலைக்குப் போவதில்லை.

ஒருநாள் நபீஸ் சஹியாவைப் பார்த்து உம்மா இனி நான் ஸ்கூலுக்குப்போக இல்லை.எங்காவது வேலைக்கு போய் நாலு காசு சம்பாதிச்சு உங்கள நல்லா பாத்துக்கப்போறன் எனக் கூறினான்.அதனைக்கேட்ட சஹியாவுக்கு முன்பிருந்த பெருமூச்சு அதிகரிக்கத் தொடங்கிற்று.மகனை ஆரத்தழுவி கட்டியணைத்து இனி என்ன செய்றது எங்களுக்கு உதவி செய்வார் யார் இருக்கா நீ இனி வேலைக்குப் போவதுதான் சரி நல்ல வேலையாய்ப் பாரு என அனுப்பிவைத்தாள்.

நபீஸ் சப்பாத்துத் தொழிற்சாலை ஒன்றில் சப்பாத்தின் கழிவுகளை அகற்றும் வேலையில் சேர்ந்து கொண்டான்.மாத வருமானமாக 3000 ரூபாய் கிடைத்தது.இரண்டு மாதத்தின் பின் நபீஸின் ஆற்றல் திறமைகளை கவனித்து வந்தார் முதலாளி.

நபீஸ் ஒருநாள் முதலாளியின் அனுமதியோடு புதிய மொடல்களை உருவாக்கி பார்த்தான்.அது வெற்றி கண்டது அவனுக்குள் இன்னும் பல திறமைகள் மறைந்து கிடப்பதை அறிந்த முதலாளி அவனை அணுகி நபீஸின் மேலதிக தகவல்களை அறிந்து கொண்டார்.அவன் பாடசாலையைத் தொடர்வதற்கு உதவிகளும் செய்தார்.

நபீஸ் கல்வியை மேற்கொள்வதற்கான அனைத்து செலவுகளையும் தானே பொறுப்பெடுத்தார்.நபீஸ் தனது படிப்பைத் தொடர்ந்தான்.சாதாரணதரம் அதி விசேடமாக சித்தி பெற்றான்.பின்பு முதலாளி நபீஸை நகரத்திலுள்ள பாடசாலையொன்றில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்பதற்காக சேர்த்து தேவையான பொருட்களையும் வாங்கிக் கொடுத்தார்.பின்பு நபீஸின் பெயரில் சிறு தொகையொன்றினை வங்கியில் போட்டு வங்கிப் புத்தகத்தை நபீஸிடம் கொடுத்தார்.

இரண்டு வருடங்களுக்கு பின் உயர்தரத்திலும் அதி விஷேட புள்ளிகளால் சித்தி பெற்று மருத்துவபீடத்துக்கு பல்கலைக்கழகம் செல்ல அனுமதி பெற்றான் நபீஸ்.பல்கலைக்கழகம் சென்ற பின்பு நபீஸுக்கு அரசாங்கமும் உதவி செய்தது.அத்தோடு முதலாளியும் தனது உதவியைத் தொடர்ந்தார்.

பல்கலைக்கழகத்தின் 6 வருடங்களை முடித்து கொண்டு மருத்துவனாக வெளியேறினான்.பட்டமளிப்பு விழாவுக்கு தாய் சஹியா முதலாளி ஆகியோரும் வந்திருந்தனர்.சிறந்த மருத்துவர் என நினைவுச் சின்னம் ஒன்றினை பிரதமர் வழங்கி நபீஸை கௌரவித்தார்.நபீஸின் புகழ் ஊரெல்லாம் பரவியது.காலப்போக்கில் நபீஸின் கிராமத்திலுள்ள அரசாங்க வைத்திசாலையில் பிரதம வைத்தியராக கடமையாற்ற அவனுக்கு அனுமதி கிடைத்தது.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஊருக்குப் போகிறேன்

என்னோடு உடன் பிறவா
எந்தை உறவுகளே
ஊருக்கு நானும்
போயிட்டு வருகின்றேன்
தாயை இழந்தேனென்று
தவித்திருந்த எனக்கு (த்)
தாயாய் தானெழுந்து
வந்த பெருந்தகையீர்
என் கண்முன்னாலே
என் தம்பி இறந்த
கதை கேட்டுக் கண்களில்
நீர் சுமந்த அரிய அன்பை
பல நாள் பட்டினியை (ப்)
போக்க உணவளித்து
தங்குதற்கு மாளிகை போல்
வீடும் தந்துதவி
உம் பிள்ளை தம்மை வந்து
எம் பிள்ளையோடு
உறவாடவிட்டு
உள்ளத்தாலும் வேறுபடா
உள்ளன்பு கொண்டு
கல்விச் சாலைகளில்
கனிவுடனே இடந்தந்து
இடர்பாட்டு நிவாரணமும்
எமக்களித்துக் களித்து
யாழ்ப்பாணத்தான்
சொத்தாக(க்)
கருதுகின்ற கல்வி தன்னை
என் பிள்ளையும் பெற்றிடவே
கொப்பியோடு பென்சிலும்
பேனாவோடு காசும்
இலவசக் கல்வியை மேலும்
இலவசமாக்கி எமக்கு
இலாவகமாய்த் தந்து
ஒருவருடம் மேலாக
தாயாய் தந்தையாய்
உடன்பிறவாச் சோதரராய்
நல்ல அயலவராய்
நலம் பல செய்து வைத்தீர்
கனக்கின்ற நெஞ்சோடு
கனநாள் இல்லாவிட்டாலும்
நினைவழியா நாட்களாய்
நினைவிலே நிலைத்துவிட்டீர்
என்ன செய்வது
என் ஊரில் ; என் காணி
செத்தை கட்டிய வீட்டை (ச்)
செத்துப்போக விட்டதெனினும்
மிச்சமிருக்கும் உயிர் வளர்க்க
உதவும் நல்ல
தொழிலைத் தரும்
என் ஊர் போனாலே
எனக்கோர் இருப்பு வரும்
வெளிநாட்டுக்காரர்கள்
தருகின்ற உதவியெல்லாம்
கைசேர்ந்து மீண்டும் செத்தை
வீடொழிந்து
கல்லாலே ஒரு வீடு கட்ட
காலம் ஒன்று வருகுதாம்
கல்லறைகள் பல கட்டி (ப்)
பின்னர்தான் கல்வீடு
கல் நெஞ்சம் கரைய
எல்லாமே கல்லாகி....
மீண்டும் என் இருப்பைத் தேட
என் ஊர் போகின்றேன்
பிரிந்தாலும் பிரியாத
உங்கள் உறவுகளைப்
பிரிந்து....
தபாற்சேவை, தந்தி
ஊர் முழங்க அமைக்க
கோபுர வாயில்களால்
தடையின்றி சிக்னல் வரும்
தொலைபேசியையும் நம்பி
ஏ-9 பாதை
எப்போதும் திறக்குமென்ற
கனவுகளை மென்று
மீண்டும்
என் ஊர் போகின்றேன்.

**சின்மயி**

# நட்பு



காசு கொடுத்து வாங்காமல்
அன்பினால் வருவது நட்பு
ஜாதி மதம் இன்றி உள்ளத்தில்
தோன்றும் உணர்வு நட்பு
நாம் ஆதிமூல நாயகனின் மேல்
வைத்ததும் நட்பு
உடலைவிட்டு உயிர் பிரிந்தாலும்
பிரியாததொன்று நட்பு

**பா.கார்த்திகா,**
**அராலி மத்தி, வட்டுக்கோட்டை.**

# காரணம் சொல்லுங்கள் சாமிகளே...

வருடா வருடம் பிரதட்டை
எடுத்து
வகை வகையாய் ஒவ்வோர்
தெய்வங்கள் மீது
நேர்த்தி வைத்து
வாழ்வு செழிக்க
எத்தனை எத்தனை
விரதமிருந்தோம்!

மாரி அம்மனுக்கு
மடை வைத்து
வடிவேலனுக்கு
காவடி எடுத்து
தோப்போர விநாயகனுக்கு
தோத்திரங்கள் ஜெபித்து
அறுகம் புல் மாலை சாத்தி
அர்ச்சித்து வழிபட்டோமே!
அநாதாவாய் எம் வாழ்வை
அவலத்துக்கு
உள்ளாக்கியது
ஏன் சாமிகளே...?
கணவனைக் காப்பாற்ற
கௌரி விரதமிருந்து
வைரவரை மகிழ்விக்க
வடை மாலை அணிவித்து
வாசல் தோறும் கோலம்
போட்டு
வரலக்ஷ்மி
நோன்பிருந்தோமே!
வரம் தராமல் போனது
ஏன் எம்மூர் சாமிகளே!

கண்ணாகக்
காக்க வேண்டிய
நீங்கள் இவ்வுலகை விட்டு
காணாமல் போன
காரணமென்ன
சொல்லுங்களே!

**செல்வநாயகம் ரவிசாந்,**
**வீரமனை, குப்பிளான்**

# விடிவுக்காக...

ஏறாத மலையெல்லாம்
ஏறிவிட்டோம்...!
கண்காணாத துயரெல்லாம்
கண்டுவிட்டோம்..!
ஆனாலும் இன்னும்...
விடிவின்றி தவிக்கிறோம்..!

நம் மண்ணகம்
மழையால் நனைந்ததை விட
நாம் சிந்திய வியர்வையால்
நனைந்ததே அதிகம்
ஆயினும்..!
விண் பார்க்க
மலர் கண் பார்க்க..
வீதியில் நின்று புலம்புகிறோம்
நாளையாவது விடிவு கிட்டுமென்று..!
இதுவரை வாழ்ந்து விட்டோம்
விடிவின்றி...!
இனியாவது வாழ்ந்திடுவோம்...
துயரின்றி..!

**ந.ஜனார்த்தன்,**
**ஹெறாப்டன்.**

# மௌனம்

எழுதாத வார்த்தைகளுக்குள்
இன்னும் ஏன் நீ...
ஒளிந்து
கொண்டிருக்கின்றாய்?
மௌன வார்த்தைகளை
மனதில் புதைத்துப்
புதைத்து
தினமும்...நீ...
மரணித்துக்
கொண்டிருக்கின்றாய்...
கனவுகள் கற்பனைகள்
எதிர்பார்ப்புகள்
ஒவ்வொன்றும் உனக்குள்
ஊமைக்காயங்களாகிப்
போக...
நீ...மட்டும்
உணர்வுகளுக்குள்
இன்னும் மௌனித்தபடி
வேரூன்றிக் கொள்கின்றாய்.

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

# அன்பு

புரியாத பிரியம்
பிரியும் போது புரியும்
நினைவுகள் நம் மனதில்
இருப்பின்
பிரிவுகள் நிரந்தரமில்லை
உன் அன்பு
என் வாழ்நாளில்
ஓர் வசந்தம்
நினைக்க மறந்தாலும்
என் அன்பை மறக்க
நினைக்காதே
என்றென்றும் என் அன்பு
தொடரட்டும்

**பு.வினஜா,**
**வல்வெட்டித்துறை.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி,**
**கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தவரின் கவனத்தை ஈர்ப்பதற்காக எதையும் மிகைப்படுத்திக் கூறும் சுபாவமுடைய பிளேயர்

'நான் உணர்ச்சிபூர்வமானவன். அடுத்தவர்களின் கவனத்தைக் கவர்வதற்காக எதையும் மிகைப்படுத்திக் கூறுபவன். எப்போதாவது குடிப்பவன்' என்று சுயசரிதையில் தன்னைப்பற்றி வெளிப்படையாகச் சொல்கிறார் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர்.


இதுபோல தனது எதிரிகள், நண்பர்கள், தெரிந்தவர்கள் எனப் பலரது தனிப்பட்ட குணங்களையும் இந்தப் புத்தகத்தில் அவர் அலசுகிறார். உலகை ஆக்கிரமித்த வல்லரசு நாட்டில் மூன்று முறை பிரதமரானவர் என்கிற முறையிலும் உலக அரசியல் களம் திரிவுபற்ற காலத்தில் முக்கிய முடிவுகள் எடுத்தவர் என்ற வகையிலும் இவரது சுயசரிதை முக்கியத்துவம் பெறுகிறது.

இன்னொரு முன்னாள் பிரதமர் கோர்டன் பிரௌயனுக்கும் டோனி பிளேயருக்கும் இடையிலான நட்பு மிக ஆழமானது. நீண்ட வரலாற்றைக் கொண்டது. அரசியல் சூறாவளிகளில் இந்த நட்பு பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்திருக்கிறது. ஒரே கட்சிக்குள் இருந்தாலும் பலமுறை நீயா-நானா என இவர்கள் முட்டிக்கொண்டிருக்கிறார்கள். முக்கிய அரசியல் முடிவுகளில் வேறுபட்டு நின்றிருக்கிறார்கள். மோசடிகளும் துரோகங்களும் கூட இவர்கள் நட்பில் இருந்திருக்கிறது. ஒரு காலத்தில் எதையும் கொள்கையுடன் கூடிய உறவாக இருந்த இவர்களது நட்பு, நாளடைவில் உள்பகையாக மாறியது. ஆனாலும் இவர்கள் எப்போதும் தனிப்பட்ட முறையிலான கசப்புணர்வை வெளிப்படுத்திக் கொண்டதில்லை. ஆனால் சுயசரிதை வடிவில் பிளேயரே இந்த உறவுக்கு வெடி வைத்திருக்கிறார்.

எதிர்பார்த்தபடியே 'ஒரு பயணம்' என்ற பெயரில் வெளிவந்திருக்கும் பிளேயரின் சுயசரிதை பிரிட்டன் அரசியலைப் பரபரப்பாக்கியிருக்கிறது. லேபர் கட்சி, கார்டன் பிரௌண், அலஸ்டார் கேம்பல், ஈராக் மீதான போர், ஈரான் அணுசக்தி, அமெரிக்க உறவு, பட்டங்களை வழங்கப்பணம் பெற்ற விவகாரம், டேவிட் மிலிபாண்ட், மத்திய கிழக்கு விவகாரம் என எல்லாக் கேள்விகளுக்கும் இந்தப் புத்தகத்தில் பதில் இருக்கிறது. பிளேயர் எதற்காகவும் மன்னிப்புக் கேட்கவில்லை. அதற்காக எல்லாவற்றையும் நியாயப்படுத்தவும் இல்லை. தெரிந்தே எந்தத் தவறையும் செய்யவில்லை என்கிறார்.

இந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில், 'பிரதமர் பதவிக்குச் சரியான நபர் என்று சகாக்களின் பேச்சைக் கேட்டு பிரௌனிடம் ஆட்சியை ஒப்படைத்தது தவறு. கட்சியை பிரௌன் ஒழித்துக் கட்டிவிடுவார் என்று முன்பே எனக்குத் தெரியும்" என்று வெடித்திருக்கிறார் பிளேயர்.

2007 ஆம் ஆண்டில் தனது புகழுக்குக் களங்கம் ஏற்பட்டு பிரதமர் பதவியில் இருந்து இறங்க வேண்டிய நிலை வந்த போது ஏற்பட்ட சங்கடங்கள் குறித்தும் அந்தச் சூழலை 'மற்றவர்கள்" பயன்படுத்திக் கொண்டதையும் பிளேயர் நினைவுபடுத்தியிருக்கிறார்.




பிரௌனுக்கு அரசியல் ஞானம் உண்டு. அரசியல் உணர்வு சுத்தமாகக் கிடையாது. பகுத்தறிவு நிறையவே இருக்கிறது. ஆனால் உணர்வுபூர்வமான அறிவில் அவர் பூஜ்யம் என்றும் பிளேயர் சாடியிருக்கிறார். எல்லாம் தெரிந்திருந்தும் தன்னால் பிரௌனை பதவியிலிருந்து அகற்ற முடியவில்[illegible]யும் அவர் பதிவு செய்திருக்கிறார். தன்னி[illegible]டமிருந்து பதவி பறிக்கப்பட்ட விதத்தை பிரௌன் தமக்குச் செய்த துரோகமாகவே மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார். 600 பக்கங்கள் கொண்ட இந்தச் சுயசரிதையில் பல இடங்களில் பிரௌனை தனிப்பட்ட முறையில் தாக்கிப் பிளேயர் எழுதியிருக்கிறார்.

பிளேயரின் அரசியல் வாழ்க்கையில் கரும்புள்ளியாகக் கருதப்படும் ஈராக் போர் பற்றி இந்தப் புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. ஈராக் போர் இப்படிச் சோகமாக முடியும் என்று தாம் முன்பே உணரவில்லை என்றும் அது முழுமையான தோல்வி என்பதையும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்காக பிளேயர் மன்னிப்பெல்லாம் கேட்கவில்லை. அந்தச் சூழ்நிலையில் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியானபோது தமக்குப் போர் [illegible]தைத் தவிர வேறு வழியில்லா[illegible]னது என்று தனது நிலையை நியாயப்படுத்தவே அவர் முயற்சித்திருக்கிறார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அறிக்கை வெளியானது போன்ற சர்ச்சைக்குரிய விவகாரங்களிலும் தம்மீது எந்தக் குற்றமுமில்லை என நழுவியிருக்கிறார்.

செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு முன்புவரை இஸ்லாம் மதத்தை தாம் புரிந்துகொள்ளவில்லை என்று பிளேயர் குறிப்பிட்டிருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இது ஒருவேளை தப்பித்துக் கொள்ளும் வழியாக இருக்கலாம். தனது வாழ்வின் மீதிப் பகுதியை மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை ஏற்படுத்துவதற்காகச் செலவிடப் போவதாகவும் முஸ்லிம் உலகுக்கும் மற்ற மத நம்பிக்கைகளுக்கும் உறவை ஏற்படுத்த முயற்சிக்கப் போவதாகவும் உறுதியளித்திருக்கிறார். இனிவரும் போர்கள் இராணுவ ரீதியிலானவையாக இருக்காது என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கும் பிளேயர், நுண்ணரசியல் வழியில் மென்மையான போர்களே இனி உலகை ஆக்கிரமிக்க வாய்ப்பிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

லேபர் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் நடக்கும் நிலையில் உள்ளூர் அரசியலிலும் பிளேயரின் புத்தகம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தலைவர் பதவிக்கான போட்டியில் முன்னாள் அமைச்சர்களான டேவிட் மிலிபாண்ட், எட்வர்ட் மிலிபாண்ட், எட்வர்ட் பால்ஸ் உள்ளிட்ட 5 பேர் இருக்கின்றனர். இவர்களில் யாருக்கும் வெளிப்படையான ஆதரவைப் பிளேயர் தெரிவிக்கவில்லை. அதே நேரத்தில் எட்வர்ட் மிலிபாண்ட் மீது பல குறைகளைத் தெரிவித்திருப்பதன் மூலம் முன்னாள் சகாவான டேவிட் மிலிபாண்டுக்குத் தார்மிக ஆதரவை வழங்கியிருக்கிறார்.

இதற்கெல்லாம் மேலாக புத்தக அறிமுக நிகழ்ச்சியில் பேசி இன்னொரு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறார் பிளேயர். ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியிருக்கும் அவர் அது தொடர்ந்தால் ஈரான் மீது போர் தொடுக்கவும் தயங்க மாட்டோம் என்று எச்சரித்திருக்கிறார். மத்திய கிழக்கில் அமைதி ஏற்படுத்தப் போகிறேன் என்று கூறிவிட்டுப் போர் தொடுப்பேன் என்று எச்சரிப்பது எந்த வகையான நியாயம் என்று தெரியவில்லை. ஒருவேளை அவரே கூறியது போல எல்லாவற்றையும் மிகைப்படுத்திக் காட்டுகிறாரோ என்னவோ?

**பூலியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய பாகிஸ்தானின் கூட்டுச் சதி?






உலக கிரிக்கெட் பில்லியன் பில்லியனாக பணம் கொட்டும் மிகப்பெரிய வியாபாரமாக ஆன பிறகு எத்தனையோ ஆட்ட நிர்ணய சதி(மாட்ஸ் பிக்ஸிங்)ஊழல்கள் வெடித்து கிளம்பின.ஆனால் இப்போது இங்கிலாந்தில் நடந்திருக்கும் பாகிஸ்தானின் மாட்ஸ் பிக்ஸிங் விவகாரம் கிரிக்கெட் உலகை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

ஒரு காலத்தில் இம்ரான் கான்,ஆஸிப் இக்பால்,ஜாவிட் மியன்டாட்,சாகிர் அப்பாஸ்,அப்துல்காதிர்,மஜீத்கான்,வாஸிம்பாரி,சர்ப்ராஸ் நவாஸ் என்று எத்தனையோ வரலாற்று நாயகர்கள் நட்சத்திரங்களாய் ஒளி வீசிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இன்றைய நிலையை பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது.

எதற்காக இந்த கிரக்கெட் வீரர்கள் இப்படி தடம் புரண்டார்கள்?தங்கள்நாட்டின்பெருமையை விட இவர்களுக்கு பணம் எப்படி பெரிதாக தெரிந்தது?ஐ.பி.எல்.போட்டிகள்தான் இன்று கிரிக்கெட் உலகத்திலேயே பணத்தை அள்ளிக்கொட்டும் மெகா போட்டியாக இருக்கிறது.

இந்தியாவிலோ அவுஸ்திரேலியாவிலோ நியூசிலாந்திலோ இருக்கக்கூடிய ஒரு சாதாரண லீக் மாட்ச் வீரர் கூட ஐ.பி.எல்.சமயத்தில் பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு போவார்.அப்படிப்பட்ட பணக்கார ஆட்டத்தில் பாகிஸ்தான் வீரர்களுக்கு இடம் இல்லை.பத்து வருடங்கள் பாகிஸ்தான் வீரர் ஆடி சம்பாதிக்க கூடிய பணத்தை ஒரு ஐ.பி.எல். வீரர் இரண்டு சீசன்களில் சம்பாதித்து விடுவார்.இதுதான் கிரிக்கெட் சூதாடிகளின் தூண்டில்.இதை தவிர போதை,பெண்,சொத்துக்கள் என்று எக்ஸ்ட்ரா பிரதிபலன்கள்.




பணத்துக்காக வேண்டுமென்றே நோபோல் வீசிய முகம்மது ஆமிருக்கு வயது 18 தான்.பந்து வீச்சை நேர்மையாக தொடர்ந்து கொண்டிருந்தால் கோடி கோடியாக சம்பாதிக்கக்கூடிய திறமை அவரிடம் இருந்தது.ஆனால் இத்தனை இளம் வயதிலேயே மனதில் கள்ளத்தனம் புகுந்து கொண்டது.

சிக்கலில் மாட்டியிருக்கும் சல்மான் பட்,முகம்மது ஆசிப்,கம்ரான் அக்மல் எல்லோருமே கூட மிகத் திறமையானவர்கள் தான். ஆனால் பேராசை கவிழ்த்து விட்டது.

இன்று கொழுந்து விட்டெரியும் ஆட்ட நிர்ணய சதி,பிரச்சினையில் பாகிஸ்தானியர்கள் மட்டுமே சிக்கிக்கொண்டதை போல் ஒரு ஊடக பிம்பம் தெரிகிறது.ஆனால் இந்தியர்களின் பின்னணி இல்லாமல் சூதாட்டம் நடக்க வாய்ப்பே இல்லை என்கிறார்கள் கிரிக்கெட் விமர்சகர்கள்.

உலக கிரிக்கெட் சூதாட்டத்தின் சிண்டிக்கேட் மையங்களாக இருக்கும் மூன்று நகரங்கள் மும்பை,கராச்சி மற்றும் தென் ஆபிரிக்காவின் ஜொகன்ஸ்போர்க்.

போதை மருந்து வர்த்தகத்தோடு கிரிக்கெட் சூதாட்ட உலகையும் தன் கைப்பிடியில் வைத்திருக்கும் தாவூத் இப்ராஹிம் வாழ்வது கராச்சியில் தான். தான் கிரிக்கெட் ஊழலில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டு அவமானத்துக்கு உள்ளான ஹன்சி குரோஞ்ஞே தென் ஆபிரிக்காவை சேர்ந்தவர் இந்தியாவின் ஆட்ட நிர்ணய சதி விவகாரங்களை பற்றி சொல்ல வேண்டியதில்லை.

உலக கிரிக்கெட் அமைப்புக்கு இந்திய கிரிக்கெட் சபையின் மீது பொறாமை உண்டு.ஏனென்றால் உலகிலேயே மிகப்பெரிய பணக்கார கிரிக்கெட் அமைப்பு இந்திய கிரிக்கெட் அமைப்பு. இந்திய கிரிக்கெட் சங்கம் தான்.வெள்ளைக்கார பிடியில் பல வருடங்களாக இருந்த உலக கிரிக்கெட் இன்று இந்திய துணைக் கண்டத்தின் பிடியில் வந்து விட்டது.

இன்றைய கிரிக்கெட் சூதாட்ட விவகாரத்தில் சமயம் பார்த்து அந்த திரியை கிள்ளிப் போட்டிருக்கிறார் இங்கிலாந்தின் முன்னாள் கப்டன் மைக்கேல் ஆதர்டன் உலக கிரிக்கெட் இந்தியா வசம் போனதுதான் இத்தகைய ஊழல்களுக்கு காரணம்.இது மாறவேண்டும் என்பது அவருடைய கருத்து.

முதலில் புகாரில் சிக்கிய வீரர்களின் மீது கடும் கண்டனத்தை தெரிவித்த பாகிஸ்தான் அரசும் கிரிக்கெட் சங்கமும் இப்போது விஷயத்தை அமுக்கும் காரியங்களில் இறங்க ஆரம்பித்திருக்கின்றன.இது முழுக்க இந்திய உளவு அமைப்பான 'ரோ'வின் சதி.மஜீத்தின் மனைவியும் மாமனாரும் இந்தியர்கள்.மஜீத்தின் சகோதரர் மற்றும் இரண்டு சகோதரிகளும் இந்தியர்களை மணம் முடித்தவர்கள்.பாகிஸ்தான் அரசுக்கும் கிரக்கெட் மிகப்பெரிய அவமானத்தை ஏற்படுத்த நடத்தப்பட்ட திட்டமிட்ட சதி இது என்று லோங் ஷாட் அடித்திருக்கிறது பாகிஸ்தான் தரப்பு.

பாகிஸ்தானியர்களும் இந்தியர்களும் சேர்ந்து செய்த கோல்மால் இது என்பது பிற நாட்டு கிரிக்கெட் அமைப்புகளின் கருத்தாகவும் இருக்கிறது.

இது கிரக்கெட் பிரச்சினை அல்ல.கிரிக்கெட் வீரர்களின் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை.தலைமை சரியாக இருந்தால் எல்லாம் சரியாக இருக்கும் என்று பொடி வைத்து பேசியிருக்கிறார் இம்ரான்கான். அவர் சொல்வது உண்மைதான்.பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கத்தின் புரவலரும் அந்நாட்டின் ஜனாதிபதியுமான ஆசிப் அலி சர்தாரி ஊழல் கடலில் மூழ்கி முத்தெடுத்தவர்.கிரிமினல் பின்னணியும் உள்ளவர்.

பத்து வருடங்களுக்கு மேல் சிறையிலிருந்த உத்தமர் பாகிஸ்தான் கிரிக்கெட்டை சுத்தம் செய்வேன் என்று அவர் இப்போது முழங்குவது வேடிக்கை தான்.பாகிஸ்தான் முன்னாள் அதிரடி வீரர் ஜாவிட் மியன்டாட்.நான் பாகிஸ்தான் கிரிக்கெட்டைப் புனிதமாக்கி காட்டுகிறேன் என்கிறார்.இவருடைய சம்பந்தி வேறு யாரும் இல்லை.தாவூத் இப்ராஹிம்.

ஊழல் பின்னணியில் யார் யார் இருந்தார்கள் அல்லது இருக்கிறார்கள் என்பது விசாரணையில் தெரிய வரும் என்பதற்கெல்லாம் எந்த உத்தரவாதமும் கிடையாது.அப்பாவி கிரிக்கெட் ரசிகன் கட்டை விரலை வாயில் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயின் சிங்கம்



சிம்பாப்வே அணியின் சிறந்த சகலதுறை வீரராக விளங்கியவர் கிரான்ட் பிளவர். தனது துடுப்பாட்டம், பந்து வீச்சுத் திறமையால் பல போட்டிகளில் சிம்பாப்வே அணி வெல்வதற்குக் காரணமாக இருந்தவர்.




ஹராரேயில் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி பிறந்தார் கிரான்ட் பிளவர். பாடசாலையில் பயிலும் காலத்திலேயே கிரிக்கெட்டில் தனது துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சால் பாடசாலை அணிக்குப் பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்தார்.

1990ஆம்ஆண்டில்சிம்பாப்வே கிரிக்கெட் சங்கத்தில் சேர்ந்ததன் மூலம் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பிளவருக்குக் கிடைத்தது. 1992 ஆம் ஆண்டு சிம்பாப்வே அணி முதன் முறையாக உலகக் கிண்ணத்தில் விளையாடியது. இதையடுத்து அந்த அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டது.

இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் முதன் முறையாக களமிறங்கியது சிம்பாப்வே. அந்த அணியில் கிரான்ட் பிளவரும் இடம் பெற்றிருந்தார். வலுவான இந்திய அணிக்கெதிராக முதல் ஆட்டத்திலேயே 82 ஓட்டங்கள் குவித்தார்.

1995 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இப்போட்டியின் முதல் ஆட்டத்தில் இரட்டைச் சதம் விளாசினார் கிரான்ட் பிளவர். இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் சிம்பாப்வே அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

1997 ஆம் ஆண்டு நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் பிளவர் இரு இனிங்ஸிலும் சதமடித்து (104, 151) அசத்தினார். இந்தச் சாதனையைப் புரிந்த முதல் சிம்பாப்வே வீரர் கிரான்ட் பிளவர்தான்.

இவரது மூத்த சகோதரர் ஆன்டி பிளவர் சிம்பாப்வே கிரிக்கெட்டின் சிறந்த வீரர்களில் ஒருவர். சகோதரர்கள் இருவரும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக கிரிக்கெட் உலகில் தங்களது திறமையால் கோலோச்சினர். பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் ஆட்டத்தில் கிரான்ட் பிளவர் 82 பந்துகளில் 140 ஓட்டங்கள் குவித்தது அவரது துடுப்பாட்டத் திறமைக்குச் சான்று.

90களில் ஆட்டமிழப்பது கிரான்ட் பிளவருக்கு சகஜம். மொத்தம் 9 முறை அவர் இவ்வாறு 90 ஓட்டங்களைப் பெற்று பின் ஆட்டமிழந்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார் கிரான்ட் பிளவர். இப்போது இங்கிலாந்தின் எஸக்ஸ் கவுன்ட்டி அணிக்காக விளையாடி வருகிறார்.

67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 3,457 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்ச ஓட்டம் 201★.

219 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 6,536 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சிறந்த பந்து வீச்சாளராகவும் பரிணாமித்த கிரான்ட் பிளவர் மொத்தம் 129 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

## தெரிந்து கொள்ளுங்கள்



# அனைத்து அணிக்கு எதிராகவும் சதம் அடித்தவர்

கிரிக்கெட்டில் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பென அனைத்திலும் சிறந்து விளங்கியவர் மேற்கிந்தியத் தீவுகளின் கால் ஹூப்பர். 21 ஆண்டுகள் அந்த அணிக்காக சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார்.

ஹூப்பர் கயானாவிலுள்ள பிரிட்ஜ்டவுனில் 1966 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி பிறந்தார். தொடக்கத்தில் கயானா அணிக்காக கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றார் பின்னர் 1987 ஆம் ஆண்டு தேசிய அணியில் இடம் பிடித்தார்.

1987 ஆம் ஆண்டு மார்ச்சில் நியூஸிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் முதன் முறையாக களமிறங்கினார் ஹூப்பர். அதே ஆண்டு டிசம்பரில் மேற்கிந்திய தீவுகள் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

ஒருநாள், டெஸ்ட் என இரண்டு போட்டிகளிலும் சிறந்த சகல துறை வீரராக வலம் வந்தார். 2001 இல் இந்தியாவுக்கெதிரான தொடரில் 233 ஓட்டங்கள் எடுத்ததே டெஸ்ட் போட்டியில் ஹூப்பரின் அதிகபட்ச ஓட்டங்களாகும். ஒருநாள் போட்டிகளில் அவரது அதிகபட்ச ஓட்டம் 133★.

இங்கிலாந்து கவுன்ட்டி கிரிக்கெட் போட்டியில் கென்ற் லங்கஷையர் அணிகளுக்காக விளையாடியுள்ள ஹூப்பர், கவுன்ட்டி கிரிக்கெட்டின் 18 அணிகளுக்கெதிராகவும் சதமடித்தவர் என்ற பெருமைக்குரியவர்.

மேலும், 100 ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 5,000 ஓட்டங்கள், 100 விக்கெட்டுகள், 100 கேட்சுகள் பிடித்த முதல் வீரர் என்ற சாதனைக்கும் உரியவர் ஹூப்பர். பின்னர் இந்தச் சாத[illegible] தென்னாபிரிக்காவின் ஜக்கலிஸ் சமன் செய்தார்.

முன் கள தடுப்பில் அசைக்க முடியாதவராக விளங்கினார் ஹூப்பர். அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறுகையில், தான் விளையாடிய காலங்களில் சிறந்து விளங்கிய துடுப்பாட்ட வீரர்களில் கால் ஹூப்பர் மறக்க முடியாதவர் எனத் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு இந்தியாவுக்கெதிரான போட்டியுடன் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார். அடுத்த ஆண்டு ஒருநாள் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

102 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 5,762 ஓட்டங்களும், 277 ஒருநாள் போட்டிகளில் 5,761 ஓட்டங்களும் எடுத்துள்ளார். இதில் 20 சதங்கள், 56 அரைசதங்கள் அடங்கும்.

மொத்தம் 307 விக்கெட்டுகளை கைப்பற்றியதுடன், 235 கேட்சுகளையும் பிடித்துள்ளார் கால் ஹூப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்மயமாகும் கியூபா

## Time to Change





## உலக வலம்

ச.துஷ்யந்தினி

மாற்றம் ஒன்றே மாறாதது என்ற உலக நியதிக்கேற்ப தற்போது கியூப கம்யூனிஸ்ட் அரசும் மாற்றத்திற்கான தேவையை உணர்ந்துள்ளது.

அண்மைக்காலமாக கியூப அரசின் இறுக்கமான கொள்கைகளில் படிப்படியாக தளர்வு ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் அரச துறையில் சுமார் 10 இலட்சம் வேலைக்குறைப்பை மேற்கொள்ளப் போவதாகவும் தனியார்,தொழில் முயற்சிகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தப் போவதாகவும் இவ்வார முற்பகுதியில் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்பு தனியார் மயப்படுத்தலில் கியூபா காட்டும் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தனியார் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதென்பது கம்யூனிஸக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய மாற்றமாக கருதப்படுகிறது.

2006 ஜூலையில் கடும் சுகவீனமுற்ற நாட்டின் முன்னாள் தலைவர் பிடல் காஸ்ட்ரோ அதிகாரத்தை சகோதரரான ரவூல் காஸ்ட்ரோவிடம் கையளித்ததைத் தொடர்ந்து கியூபாவில் பொருளாதார சீர்திருத்தத்திற்கான சமிக்ஞைகள் தென்பட ஆரம்பித்தன.

கையடக்கத்தொலைபேசி விற்பனை மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை, அரசுக்கு சொந்தமான கடைகள் தனியார் மயப்படுத்தப்பட்டமை,தனியார் டாக்ஸிகளுக்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல் மற்றும் தனிப்பட்ட விவசாயிகளுக்கு நிலம் வழங்கல் உள்ளிட்ட சிறிய மாற்றங்கள் தொடராக இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் அரசாங்கத்தின் புதிய அறிவிப்பானது ஏனைய நாடுகளைப் போன்று கியூபாவும் மிக விரைவாக மாற்றமடைந்து வருவதைப் புலப்படுத்துவதாகத் தெரிவிக்கும் பொருளாதார நிபுணர்கள் 1959 புரட்சியின் பின்னரான மிகப் பெரிய மாற்றமாக இதனைக் கருதுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நாட்டின் வானொலி,தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை என அனைத்து ஊடகங்களிலும் தொழிற்சங்க சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுமார் 10 இலட்சம் அரச பணியாளர்கள் வேலையை இழக்க நேரிடுமெனவும் இவர்களில் 5 இலட்சம் பேர் எதிர்வரும் மார்ச்சுக்குள் வேலையை இழக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரச பணியாளர்களின் தொகை 51 இலட்சமெனக் கூறப்படும் நிலையில் ஏறத்தாழ இவர்களில் 10 வீதத்தினர் விரைவில் வேலையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ் அறிவிப்பால் கவலையடைந்துள்ள தொழிலாளர்கள் இவ்வளவு பெருந்தொகையானோருக்கு தனியார் துறையினரால் வேலைவாய்ப்புகளை வழங்கமுடியுமா எனக் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வேலைக்குறைப்பு நடவடிக்கைகள் அடுத்த ஆண்டிலிருந்து உடனடியாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படும் அதே வேளை விவசாயம்,கட்டுமானம்,கைத்தொழில், சட்ட அமுலாக்கம் மற்றும் கல்வி போன்ற மிகவும் அத்தியாவசியமான துறைகளில் மட்டுமே எதிர்காலத்தில் அரசாங்கம் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற வேலை வாய்ப்புக்கான புதிய வாய்ப்புகளால் தொழிலுக்கான தெரிவுகள் விரிவாக்கப்பட்டிருப்பதாகவும் குத்தகை, கூட்டுறவு, சுயவேலைவாய்ப்பு போன்றவற்றில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளீர்க்கப்படுவரென்றும் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவிக்கின்றது.

மேலும் சுயதொழில் முயற்சியாளர்கள் வங்கிக் கணக்கை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் இலகுவாக்கப்படவுள்ளதுடன் அவர்களுக்கு வங்கிக் கடனை வழங்குவது போன்ற சமூகப் பாதுகாப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

கியூப மக்கள் அரசிடமிருந்து அளவுக்கதிகமாக எதிர்பார்க்கின்றனர் என்பது காஸ்ட்ரோவின் நீண்ட கால குற்றச்சாட்டாகும்.

மாதாந்தம் 2 டொலர்களுக்கும் குறைந்த சம்பளத்தையே அரசாங்கம் வழங்கி வருவதனால் கல்வி மற்றும் சுகாதார வசதிகளையும் இலவசமாக வழங்கி வருவதுடன் வீடமைப்பு,போக்குவரத்து மற்றும் அத்தியாவசிய உணவு ஆகியவற்றுக்கான மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

நாட்டில் வேலைவாய்ப்பின்மை மிகவும் அதிகமாகக் காணப்படுவதால் தேவைக்கு அதிகமானவர்களை வேலைக்கு உள்ளீர்க்கும் நிலைக்கு கியூப அரச நிறுவனங்கள் தள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே சுயதொழில்களை ஊக்குவிக்கும் முயற்சியாக அவ்வாறான தொழில்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை தளர்த்தி அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களை அதிகளவில் விநியோகிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## கம்யூனிஸக் கொள்கைகளில் அதிரடி மாற்றங்கள்

ஆனால் சில அரசதுறைகளில் ஏற்கனவே இரகசியமான முறையில் வேலைக்குறைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில் புதிய தொழில்களைத் தேடுவதற்கான போதிய வசதிகளை அரசாங்கம் தமக்கு ஏற்படுத்தித் தரவில்லையென வேலையை இழந்தவர்கள் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை தனியார் வர்த்தக நிறுவனங்கள் பணியாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு முதல்முறையாக அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதற்கிடையில் முடி அலங்காரம்,டாக்ஸி சாரதி மற்றும் சிறிய அளவிலான உணவு விடுதிகளை நடத்தல் போன்ற சிறியளவிலான சுயதொழில் முயற்சிகளில் ஏற்கனவே அரசின் அனுமதியின்றி சிறுதொகையான மக்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச துறையினரின் சம்பளக் குறைவால் ஏற்கனவே சுயதொழில்களைத் தேடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு பெரியளவிலான அதிர்ச்சியை ஏற்படுத்தாதென சில செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இம்மாற்றங்களை வரவேற்றுள்ள குறிப்பிட்ட தொகையான மக்கள் அரசின் நிர்வாக சீரின்மையால் உருளைக் கிழங்கிலிருந்து பற்பசை வரைக்குமான ஒவ்வொன்றுக்கும் அடிக்கடி தட்டுப்பாடு நிலவுவதாகவும் சில சேவைகள் தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டால் இந்நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுமெனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இலட்சக்கணக்கான தொழிலாளர்களை தனியார் துறையினர் உள்ளீர்ப்பதென்பது கற்பனைக்கு எட்டாத விடயமெனக் கூறியுள்ள பொருளாதார நிபுணரொருவர் இது நாட்டிற்கு பாரிய பிரச்சினைகளை உருவாக்குமெனவும் எச்சரித்திருந்தார்.

இதற்கிடையில் தனியார் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பணியாளர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகையை வரியாக அறவிடுவதன் மூலம் வரிவருமானத்தை அதிகரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சம்பளம் குறைவு என்பதால் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையொன்றைத் தேடுவதில் ஆர்வம் காட்டாததனாலேயே வேலைவாய்ப்பின்மை வீதம் அதிகமாக இருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு வாரத்திற்கு முன்னதாக அமெரிக்கச் சஞ்சிகையொன்றின் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் கம்யூனிஸ பொருளாதாரம் நீண்டகாலத்திற்கு தாக்குப் பிடிக்காதென காஸ்ட்ரோ கூறியதாக அச் செய்தியாளர் தெரிவித்திருந்தார்.

ஆனால் தான் கூறிய கருத்து தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக பின்னர் கூறிய காஸ்ட்ரோ முதலாளித்துவ கொள்கைகள் ஒருபோதும் கியூபாவுக்குள் நுழையாது என தான் கூறியிருந்ததாக தெரிவித்திருந்தார்.

முதலாளித்துவப் பொருளாதாரமா,கம்யூனிஸப் பொருளாதாரமா என்பது ஒரு புறமிருக்க ஏனைய நாட்டு மக்களைப் போல கியூப மக்களும் இன்றைய உலகின் அனைத்து வசதிகளையும் அனுபவிக்க வேண்டுமென்பதே மனித நேயம் மிக்கவர்களின் எதிர்பார்ப்பாகும்.

எனவே மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் எந்தவொரு மாற்றமும் வரவேற்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















மாளவிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 66ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.